குருபாதம்

ஞானசம்பந்தம்

தருமை ஆதீனத் திங்கள் இதழ்

மலர் 49 | பிரமோதூத ஆண்டு சித்திரைத்திங்கள் 10-5-90 | இதழ்

தருமை ஆதீனம் ஆதிபரமாசாரியர்



ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள்

-: குருபூஜை விழா :-

16 – 6 – 90 செவ்வாய்க்கிழமை

தருமையாதீனக் குருமுதல்வர்

ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள்

உ

குருபாதம்

ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருள்வாக்கு

நானன்றி நிற்கவெழுஞ்
சச்சிதா நந்தனைநீ
ரனென் குணமென்
னிடும்பென்னே — ஊனநீ
ஞானகுணம் பெற்றின்னு
நானு னெனநவிலும்
னகுணம் போனதில்லையே.

— முத்திநிச்சயம் 10

ஆசிரியர் :-

வித்துவான்
இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள்

துணையாசிரியர் :-

மகாவித்துவான்
சி. அருணைவடிவேல் முதலியார்

உ
குருபாதம்

ஞானசம்பந்தம்

தருமையாதீனத்திங்கள்இதழ்

மலர் 49 | 10–5–90 | இதழ் 6

உட்பொருள்

எண் பக்கம்

1 திருத்தருமை ஆதீனம் ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி திருக்கோயில் பெருவிழா அழைப்பிதழ் ... அ
2 தருமைக் குருபூஜை தரிசிக்க வருக ! ... 265
3 தருமை ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் வழங்கிய ஆசியுரை ... 269
4 காவியத்தில் திருப்புமுனைகள் ... 279
5 இன்றைய வாழ்விற்குக் கம்பராமாயணம் ... 281
6 நம்மைப் பேணும் அம்மை ... 285
7 செய்திகள் ... 289
8 எதிர்காலம் ... 292
9 பார்வையாளர் குறிப்பு ... 296

உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமை ஆதீனம்

ஸ்ரீ ஞானம்பிகை உடனுகிய ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி

திருக்கோயில்

பெருவிழா அழைப்பிதழ்

பெருங்கருணைத் தடங்கடலாகிய சிவபெருமான் ஆன்மாக்கள் மீது வைத்த எல்லையில்லாப் பெருங்கருணையினுலே காணுத அருவினுக்கும் உருவினுக்கும், காரணமாய் நிகழ்குறியாம் சிவலிங்கமாதி திருவுருக்கொண்டு எழுந்தருளியிருக்கின்றதலங்கள் பலவற்றுள், இந்திரன், அகத்தியர், தருமன் ஆகியோர்களால் பூசிக்கப்பெற்றதும், காவிரி முதலியதீர்த்தங்களால் சிறப்புற்றதும், வில்வாரண்யம் என்னும் திருநாமம் உற்றதும் ஆகிய சிறப்புக்களை உடையது தருமபுரம். இங்கு ஸ்ரீ அபயாம்பிகை உடனுகிய ஸ்ரீ தருமபுரீசுவரசுவாமி திருக்கோயில் கொண்டு எழுந்தருளி அன்பர்கட்கு அருள்வழங்கி வருகிருர். இத்தலத்தில் ஸ்ரீ ஆலவாய்ச் சொக்கநாதப்பெருமான திருவருளையும், கமலை ஸ்ரீஞானப்பிரகாச தேசிகர் குருவருளையும், நிரம்பப் பெற்றுத் திகழ்ந்த ஸ்ரீ குருஞான சம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள், தம் குருமூர்த்திகளது அருளாணையின்படி, சைவபரிபாலனம் என்றும் நிகழ்ந்து வருவதற்குரிய ஞானபீடத்தை நிறுவி வீற்றிருந்து ஜீவசமாதி கூடிய திருக்கோயிலே ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயில். இதன்கண் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீஞானம்பிகை உடனுகிய ஸ்ரீஞானபுரீசுவர சுவாமிக்கு, பிரமோதூத ஆண்டு சித்திரைத்திங்கள் 23 ஆம் நாள் (6—5—1990) ஞாயிற்றுக்கிழமை தொடங்கிப் பெருவிழா நடைபெறும். இந்நாட்களில் திருநெறிய தெய்வத்தமிழ் மாநாடு நிகழ்ச்சி நிரலிற் கண்டவாறு சிறப்பாக நடைபெறும். சிவநேயச் செல்வர்கள் யாவரும் வந்திருந்து திருவிழாக்காட்சியைத் தினமும் தரிசித்தும், சொற்பொழிவுகளைக் கேட்டும் நலம்பெறுவார்களாக

திருக்கயிலாய பரம்பரைத்
தருமை ஆதீனம்
கார்பார்
சொக்கநாதத் தம்பிரான்.

தருமை ஆதினம் மடாலயம்
பிரமோதூத - சித்திரை
1990

திருநாள் விபரம்

தமிழ்த் தேதி	ஆங்கிலத் தேதி	கிழமை	திரு நாள்	விபரம்
21	4—5—90	வெள்ளி		காலை 9 - 00 மணிக்குமேல் கணபதி ஹோமம்.
22	5—5—90	சனி		காலை 10 – 30க்கு மேல் நவக்கிரக ஹோமம். உத்திரநட்சத்திரம் கூடிய சுபதினத்தில் இரவு 9-30 மணிக்கு மேல் 10-30 மணிக்குள் தனுர் லக்னத்தில் யஜமான அனுக்ஞை. சுவாமி அனுக்ஞை. விக்னேஸ்வர பூஜை. வாஸ்து சாந்தி. மிருத்ஸங்க்ரஹணம், அங்குரார்ப் பணம், ரக்ஷாபந்தனம்.
23	6—5—90	ஞாயிறு	1	உத்திர நட்சத்திரம் கூடிய சுபதினத்தில் காலை மணி 7-00 க்கு மேல் 9-00 க்குள் ரிஷப லக்னத்தில் ஸ்ரீ ஞானபுரீசுவரர் மகத்துவஜாரோஹணம்.
24	7—5—90	திங்கள்	2	கற்பகவிருக்ஷக் காட்சி.
25	8—5—90	செவ்வாய்	3	பூதம், பூதகி, இடும்பவாகனக் காட்சி.
26	9—5—90	புதன்	4	நந்தி, காமதேனு குதிரைவாகனக் காட்சி.
27	10—5—90	வியாழன்	5	சகோபுர ரிஷபவாகனக் காட்சி.

28	11—5—90	வெள்ளி	6	யானை, அன்னம், ஆட்டுக்கடாவாகனக் காட்சி.
29	12—5—90	சனி	7	இரவு மணி 9-00 க்குமேல் 10-30 க்குள் தனுர் லக்னத்தில் திருக்கல்யாண வைபவம், புஷ்ப விமான வெள்ளிரதக் காட்சி.
30	13—5—90	ஞாயிறு	8	குதிரை, கிளி, யானைவாகனக் காட்சி.
31	14—5—90	திங்கள்	9	காலை மணி 6க்குள் மேஷ லக்னத்தில் பஞ்ச மூர்த்திகளும் தேருக்கு எழுந்தருளல், காலை மணி 7-00 க்குமேல் கடக லக்னத்தில் திருத் தேர் வடம்பிடித்தல்.
1	15—5—90	செவ்வாய்	10	காலை ஸ்ரீசபாநாயகர் தீர்த்தம் கொடுத்தருளல். பிறகு பஞ்ச மூர்த்திகளும் ரிஷபாருடராய் எழுந்தருளிக் காவிரியில் தீர்த்தம் கொடுத் தருளல். இரவு துவஜாவரோஹணம்.
2	16—5—90	புதன்		மௌன உற்சவம்.
3	17—5—90	வியாழன்		ஸ்ரீ சண்டேசுவரர் உற்சவம்.
4	18—5—90	வெள்ளி		காலை உத்ஸவப் பிராயச்சித்தாபிஷேகம், இரவு 8மணிக்குமேல் 9மணிக்குள் தனுர்லக்னத்தில் பஞ்சமூர்த்திகள் யதாஸ்தானம்.

தருமபுரம், அனைத்துலக சைவசித்தாந்த

6, 7, 8—5—90

ாள்	முற்பகல் 10-00 மணி முதல் — 1-00 மணி வரை
5—90 ாயிறு	வரவேற்புரை : திரு. தி. ந. இராமச்சந்திரன், பி. காம்., பி. எல்., ஆசியருளல் : தருமை ஆதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் தொடக்கவுரை : சூரியனார்கோயில் ஸ்ரீ சிவாக்ரயோகிகள் ஆதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ தெய்வசிகாமணி தேசிக பரமாசாரிய சுவாமிகள்
-5—90 ிகள்	இரண்டாம் அமர்வு : ஆய்வுப்பொருள் : “ தருமை ஆதீனச் செப்பேடுகள் ” முதன்மை உரை : டாக்டர் திரு ஆர். நாகசாமி. இணைப்பாளர் : திரு. சி. கோவிந்தராசனார் கட்டுரையாளர்கள் : புலவர் திரு. ப. வெ. நாகராசன், — செய்தி நோக்கில் டாக்டர் திரு. கோ. தெய்வநாயகம்,— சிறப்பு நோக்கில்
-5—90 ெவ்வாய்	நான்காம் அமர்வு : ஆய்வுப்பொருள் : “ சைவசித்தாந்தத்தில் கன்மம் ” இணைப்பாளர் : மகாவித்துவான் திரு. சி. அருணைவடிவேல் முதலியார் கட்டுரையாளர்கள் : டாக்டர் திரு. டி. பி. சித்தலிங்கையா — மூலகன்மம் வித்துவான் திருமதி. ப. நீலா — சஞ்சிதம்

ஆராய்ச்சி நிறுவனம் நடத்தும் (கருத்தரங்கு)

மூன்று நாட்கள்

பிற்பகல்
2-30 மணி முதல் — 5·00 மணி வரை

முதல் அமர்வு :

ஆய்வுப் பொருள் : " திருமணத் தத்துவம் "

கட்டுரையாளர்கள் :

டாக்டர் திரு. கு. சுந்தரமூர்த்தி
— சங்ககாலத் திருமண முறை

டாக்டர் திரு. எஸ். ஸ்ரீநிவாச சர்மா
— சுமார்த்த, வைணவ பிராமணர்கள்

சிவஸ்ரீ ஏ. வி. சுவாமிநாத சிவாசாரியார்
— ஆதிசைவ பிராமணர்கள்

வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர்
— வேளாளர் மற்றும் ஏனையோர்

மூன்றும் அமர்வு :

புலவர் திரு. செ. இராசு
— பதிப்பு நோக்கில்

ஐந்தாம் அமர்வு :

டாக்டர் திரு. கு. சுந்தரமூர்த்தி — பிராரத்தம்

திரு. தி. ந. இராமச்சந்திரன் — ஆகாமியம்

நிறைவுரை : திரு. சி. அருணைவடிவேல் முதலியார்

நன்றியுரை : திரு. எஸ். பாஸ்கரன்

வாழ்த்து :

உ
குருபாதம்

திருநெறிய தெய்வத் தமிழ் மாநாடு

6—5—90 ஞாயிற்றுக்கிழமை] [மாலை 6–30 மணி

முதல் திருநாள் – சமயாசாரியர் நினைவுநாள்

கருத்தரங்கம்

வரவேற்புரை :

வித்துவான்
ஸ்ரீமத் சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள்,
கட்டளை விசாரணை, திருநள்ளாறு தேவஸ்தானம்.

தொடக்கவுரை :

சூரியனார்கோயில் ஸ்ரீ சிவாக்கிரயோகிகள் ஆதீனம்
26 ஆவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ தெய்வ சிகாமணி தேசிக
பரமாசாரிய சுவாமிகள்

இணைப்பாளர் :

திரு. டி. என். இராமச்சந்திரன், பி. காம்., பி. எல்.,
இயக்குநர், த. ஆ. அ. சை. ஆராய்ச்சி நிறுவனம், தருமபுரம்.

விரிவுரை :

டாக்டர். திரு. எஸ். ஸ்ரீநிவாசசர்மா, எம், ஏ , பிஎச். டி.
பேராசிரியர், வடமொழித்துறை
அண்ணாமலைப் பல்கலைக் கழகம், சிதம்பரம்.
— வேதத்தில் சைவம்

சிவஸ்ரீ. ஏ. வி. சுவாமிநாத சிவாசாரியார்
தலைமை ஆசிரியர். த. ஆ. வேதசிவாகம பாடசாலை, தருமபுரம்.
— ஆகமத்தில் சைவம்

வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர், எம். ஏ.,
முதல்வர், தருமை ஆதீனக் கலைக் கல்லூரி, தருமபுரம்.
— திருமுறைகளில் சைவம்

இரவு 9-00 மணி

பக்தித் திரைப்படம் " மீனாட்சி திருவிளையாடல் "

7—5—90 திங்கட்கிழமை] [மாலை 6-30 மணி

இரண்டாம் திருநாள் – சந்தானசாரியர் நினைவுநாள்

சிந்தனை மேடை

வரவேற்புரை :

வித்துவான்
ஸ்ரீமத் மௌன மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள்
கட்டளை விசாரணை, ஸ்ரீமௌனமடம், திருச்சிராப்பள்ளி.

தொடக்கவுரை :

திரு. கே. ஞானதேசிகன், ஐ. ஏ., எஸ்.,
கூடுதல் மாவட்ட ஆட்சியர்,
மாவட்ட திட்ட முகமை அலுவலர், தஞ்சாவூர்.

இணைப்பாளர் :

திரு. தி. வ. காந்திமதிநாதன், பி. ஏ., (ஆனர்சு)
பேராசிரியர் (ஓய்வு) அ. வ. அ. கல்லூரி, மயிலாடுதுறை.

சிந்தனைப்பொருள் :

இன்றைய இளைஞர்களிடையே
சமய நாட்டம் குறைந்து காணப்படுவது ஏன்?

சிந்திப்போர் :

திரு. சி. கோவிந்தராசனார், எம். ஏ.,
பேராசிரியர், தமிழியற்புலம், ம. கா. பல்கலைக் கழகம், மதுரை,

புலவர் திரு. ப. வே. நாகராசன், எம். ஏ.,
சுவடியியல், தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.

டாக்டர் திரு. கோ. தெய்வநாயகம், எம். ஏ., பிஎச். டி.,
தலைவர், கட்டடக் கலைத்துறை, தமிழ்ப் பல்கலைக் கழகம்,
தஞ்சாவூர்.

புலவர் திரு. செ. இராசு, எம். ஏ.,
இணைப்பேராசிரியர், கல்வெட்டியல், தமிழ்ப் பல்கலைக் கழகம்,
தஞ்சாவூர்.

இரவு 9-00 மணி **விகடம்**
திருச்சேறை திரு. திருமங்கைதாசன் குழுவினர்

8—5—90 செவ்வாய்க்கிழமை] [மாலை 6–30 மணி

மூன்றும் திருநாள் – ஸ்ரீ அருள்நமசிவாயர் நினைவுநாள்

நுண் பொருள் ஆய்வரங்கம்

வரவேற்புரை :

திரு. சி. ஆர். குஞ்சிதபாதம் ஐயர், பி. ஏ., பி. எல்.,
வழக்குரைஞர், மயிலாடுதுறை.

தொடக்கவுரை :

டாக்டர் திரு. சி. பாலசுப்பிரமணியம், எம். ஏ., பிஎச். டி.,
துணைவேந்தர், தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.

இணைப்பாளர் :

மகாவித்துவான் திரு. சி. அருணைவடிவேல் முதலியார்
ஆய்வாளர், தத்துவமையம், தமிழ்ப்பல்கலைக்கழகம், காஞ்சிபுரம்.

ஆய்வுப்பொருள் :

" யாவர்க்குமாம் இறைவற்கொருபச்சிலை " எனும்
திருமந்திரப் பாடல்.

ஆய்வாளர்கள் :

டாக்டர் டி. பி. சித்தலிங்கையா, எம். ஏ., பிஎச். டி.,
தலைவர், சைவசித்தாந்தத்துறை, ம. கா. பல்கலைக் கழகம்.
மதுரை.

— இறைவற்கொரு பச்சிலை

வித்துவான் திருமதி. ப. நீலா, எம். ஏ., எம். ஃபில்.,
பேராசிரியை, தருமை ஆதீனக் கலைக் கல்லூரி, தருமபுரம்.

— பசுவுக்கு ஒரு வாயுறை

டாக்டர் திரு. கு. சுந்தரமூர்த்தி, எம். ஏ., பிஎச். டி.,
பேராசிரியர், அ. சை. சி. ஆராய்ச்சி நிறுவனம், தருமபுரம்.

— உண்ணும்போது ஒரு கைப்பிடி

திரு. டி. என். இராமச்சந்திரன், பி. காம்., பி. எல்.,
இயக்குநர், அ. சை. சி. ஆராய்ச்சி நிறுவனம், தருமபுரம்.

— பிறர்க்கு இன்னுரை

இரவு 9-00 மணி

" வண்ணக்கலவை " சிறுநாடகம்

தருமை ஆதீனக் கலைக் கல்லூரி மாணவர்
திரு. வி. பார்த்தசாரதி குழுவினர்

9—5—90 புதன்கிழமை] [மாலை 6-30 மணி

நாலாம் திருநாள்

காழி ஸ்ரீ கங்கை மெய்கண்டார் நினைவுநாள்

பட்டி மண்டபம்

வரவேற்புரை : செந்தமிழ்ப்புரவலர்

திரு. இரா. இராஜசேகரன் பி. எஸ்சி., பி. எல்.,

நாசில் பண்ணை, பூம்புகார்.

தொடக்கவுரை :

திருமதி. சரோஜினி வரதப்பன், எம். ஏ.,

சென்னை.

நடுவர் :

திருவண்ணாமலை ஆதீனம் குன்றக்குடி குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ தெய்வசிகாமணி அருணாசல தேசிக பரமாசாரிய சுவாமிகள்

(தவத்திரு குன்றக்குடி அடிகளார்)

பொருள் :

வாழ்க்கைக்கு வழிகாட்டியாகவும், உந்துசக்தியாகவும் விளங்கவல்லது இராமாயணமா ? பெரியபுராணமா ?

இராமாயணமே !	பெரியபுராணமே !
டாக்டர் திரு அ. கலியபெருமாள், எம், ஏ., பிஎச். டி., மயிலாடுதுறை.	டாக்டர் திரு. மு. சிவச்சந்திரன், எம். ஏ., பிஎச். டி., தருமபுரம்.
புலவர் திருமதி. துரை வள்ளி, எம். ஏ , பி. எட்., மயிலாடுதுறை.	வித்துவான் திருமதி. ப. நீலா, எம். ஏ., எம். ஃபில்., தருமபுரம்.
டாக்டர் திரு. சி. சிவசங்கரன், எம். ஏ., பிஎச். டி., ஆக்கூர்.	புலவர் திரு க. இராமகிருட்டிணன், எம். ஏ., எம். எட்., சீகாழி.

இரவு 9-00 மணி **இன்னிசை விரிவுரை**

கலைமாமணி - ஹரிகதாவாணி

தஞ்சை திருமதி. டி. ஆர். கமலாமூர்த்தி குழுவினர்.

10—5—90 வியாழக்கிழமை] [மாலை 6-30மணி

ஐந்தாம் திருநாள்

காழி ஸ்ரீ பழுதைகட்டிச்சிற்றம்பலநாடிகள் நினைவுநாள்

கவியரங்கம்

வரவேற்புரை :

திரு. இரா. சிவபுண்ணியம், பி. ஏ., பி. எல்.,
வழக்குரைஞர். மயிலாடுதுறை.

தொடக்கவுரை :

திரு. இரா. வேலு, பி. ஏ.,
நகராட்சி ஆணையர், மயிலாடுதுறை.

இணைப்பாளர் :

டாக்டர். திரு. சொ. சிங்காரவேலன், எம். ஏ., பிஎச். டி.,
பேராசிரியர், அ. வ. அ. கல்லூரி, மயிலாடுதுறை.

பொருள் : கற்பனையில் ஒரு கவிதைக் கடிதம்

கடிதம் படைப்போர் :

திரு. சாமி. கிருட்டிணமூர்த்தி, எம். ஏ.,
தருமபுரம்.
— ஞானசம்பந்தருக்குப் பூம்பாவை

கவிஞர் திரு. ஞானச்செல்வன். எம். ஏ., பி. எட்.,
திருவாரூர்.
— நாவரசருக்குத் திலகவதியார்

க்விஞர் திரு ம. வே. பசுபதி, எம். ஏ.,
திருப்பனந்தாள்.
— சுந்தரருக்குப் பரவையார்

கவிஞர் திரு. கங்கை இரெ. மணிமாறன், எம். ஏ.,
கங்காதரபுரம்.
— மணிவாசகருக்கு வந்தியம்மை

இரவு 9-00 மணி பரதநாட்டியம்

வழங்குவோர் : மயிலாடுதுறை சோழமண்டல நாட்டியக்கழகம்
நட்டுவாங்கம்: நிருத்தகமாமணி
செல்வி. லதா மாலினி மதிவாணன் மற்றும் மாணவியர்.

11—5—90 வெள்ளிக்கிழமை] [மாலை 6–30 மணி

ஆறாம் திருநாள்

காழி ஸ்ரீ பழுதைகட்டிச் சம்பந்த முனிவர் நினைவுநாள்

வரவேற்புரை :

டாக்டர் திரு. மு. சுவாமிநாதன், எம். பி., பி. எஸ்.,
மயிலாடுதுறை.

தொடக்கவுரை :

திரு. எம். ஜெயபால், பி. ஏ., பி. எல்.,
சார்பு நீதிபதி, மயிலாடுதுறை.

இன்னிசை விரிவுரை

அமுதமொழிக்கொண்டல்
திருமுருக கிருபானந்த வாரியார் அவர்கள்

— கண்ணுதல் கருணை

இரவு 9-00 மணி

நாடகம்

ஸ்ரீ குருஞானசம்பந்தர் மிஷன் மெட்ரிகுலேஷன் பள்ளி
மாணவ - மாணவியர்

—காளையார்கோயில்

12—5—90 சனிக்கிழமை] [மாலை 6–30 மணி

ஏழாந்திருநாள்

சிவபுரம் ஸ்ரீ ஞானப்பிரகாசர் நினைவுநாள்

திருக்கல்யாணத் திருநாள்

வரவேற்புரை ;

திரு. எஸ். பாஸ்கரன், பி. ஏ., பி. எல்.,
பதிவாளர், அனைத்துலக சைவசித்தாந்த ஆராய்ச்சி நிறுவனம்,
தருமபுரம்.

தொடக்கவுரை :

தொண்டைமண்டல ஆதீனம் குருமகாசந்நிதானம்
கயிலைப்புனிதர்
ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக
பரமாசாரிய சுவாமிகள்
காஞ்சிபுரம்.

இன்னிசை விரிவுரை

அமுதமொழிக்கொண்டல்
திருமுருக கிருபானந்த வாரியார் அவர்கள்

— கந்தவேள் கருணை

இரவு 9-00 மணி **பொம்மலாட்டம்**

ஸ்ரீ கணநாதர் பொம்மை நாடக சபையினர்
திருஇந்தளூர்.

— அறுபடைவீடு

18—5—90 ஞாயிற்றுக்கிழமை] [மாலை 6-30 மணி

எட்டாம் திருநாள்

சிவபுரம் ஸ்ரீ தத்துவப்பிரகாசர் நினைவுநாள்

வரவேற்புரை :

டாக்டர் திரு. இரா. செல்வக்கணபதி,
எம். ஏ., பி. எட்., பிஎச். டி.,
பேராசிரியர்,
தருமை ஆதீனக் கலைக் கல்லூரி, தருமபுரம்.

தொடக்கவுரை :

திரு. சு. முருகையா, எம். ஏ.,
கோட்டாட்சியர், மயிலாடுதுறை.

இன்னிசை விரிவுரை

அமுதமொழிக்கொண்டல்
திருமுருக கிருபானந்த வாரியார் அவர்கள்

— கண்ணன் கருணை

[14—5—90 திங்கட்கிழமை] [மாலை 6-30 மணி

ஒன்பதாம் திருநாள்

திருவாரூர் செட்டித்தெரு
ஸ்ரீ பழுதைகட்டி ஞானப்பிரகாசர் நினைவுநாள்

வழக்காடு மன்றம்

வரவேற்புரை :

வித்துவான். திருமதி. ப. நீலா. எம். ஏ., எம். ஃபில்.,
பேராசிரியர், த. ஆ. க. கல்லூரி. தருமபுரம்.

தொடக்கவுரை:

திரு. என். கிருஷ்ணசாமி ரெட்டியார் பி. ஏ., பி. எல்.,
முன்னாள் உயர்நீதிமன்ற நீதிபதி, சென்னை.

நடுவர் :

டாக்டர் திரு. இரா. செல்வக்கணபதி,
எம். ஏ., பி. எட்., பிஎச். டி.,
பேராசிரியர், த. ஆ. க. கல்லூரி, தருமபுரம்.

வழக்கு :

தமிழ் இலக்கியங்கள்
பெண்மைக்கு உரிய ஏற்றம் தரவில்லை

வழக்குத் தொடுப்பவர் :

கவிஞர் இளசை
திரு. எஸ். சுந்தரம்,
எம். ஏ.,
திருச்சிராப்பள்ளி.

வழக்கு மறுப்பவர் :

டாக்டர்
திரு. மு. சிவச்சந்திரன்,
எம். ஏ., பிஎச். டி., பி. எட்.,
தருமபுரம்.

இரவு 9-00 மணி

பக்தித் திரைப்படம் "திருவருட்செல்வர்"

15—5—90 செவ்வாய்க்கிழமை] [காலை 9-00 மணி

பத்தாந்திருநாள்

கமலை ஸ்ரீ ஞானப்பிரகாசர் குருபூஜைத் திருநாள்

வரவேற்புரை :

திரு. வி. ஆறுமுகம் பிள்ளை, ஐ. ஏ. எஸ்., (ஓய்வு)
மயிலாடுதுறை.

தொடக்கவுரை :

டாக்டர் திரு. ச. முத்துக்குமரன், எம். எஸ்சி., பிஎச். டி.,
துணைவேந்தர்,
பாரதிதாசன் பல்கலைக் கழகம், திருச்சிராப்பள்ளி.

விரிவுரைகள் :

வித்துவான் திரு. தா. குருசாமி, மதுரை.
— இலிங்க வழிபாடு

வித்துவான் திரு. சு. மு. சுந்தரராசன், திருவாரூர்.
— குருவழிபாடு

வித்துவான் திரு. நி. சு. சுந்தரராமன், மதுரை.
— சங்கம வழிபாடு

காலை 10-30 மணி

ஸ்ரீ சொக்கநாதப் பெருமான் சிறப்பு வழிபாடு

விழாமலர் : பதினொராந் திருமுறை

பகல் 12-00 மணி

ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயில் வழிபாடு

நண்பகல் 1-00 மணி

மாகேசுவரபூசை

15—5—90 செவ்வாய்க்கிழமை] [மாலை 5-00 மணி

வரவேற்புரை :

திரு. துரைராஜு பிள்ளை
கடைக்கண் விநாயகர் நல்லூர் எஸ்டேட், சீகாழி.

விரிவுரை :

புலவர் திரு. கே. கணபதி, பி. லிட்., பி. எட்., தருமபுரம்.
— சொக்கநாத வெண்பா

திரு. எம். பாலசுப்பிரமணியன், கோவை.

— பண்டாரக்கலித்துறை

திரு. ப. சிவநேசன், தருமபுரம்.

— சொக்கநாதக் கலித்துறை

மாலை 7-00 மணி

தருமை ஆதீனம் இருபத்தாறாவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த

பரமாசாரிய சுவாமிகள்

குருமூர்த்த ஆலய வழிபாட்டுக்கு எழுந்தருளல்

16—5—90 புதன்கிழமை] [காலை 7-00 மணி

பதினோராம் திருநாள்

ஸ்ரீ குருஞானசம்பந்தர் குருபூசைத் திருநாள்

பட்டினப்பிரவேசம்

ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயிலில்

சிவபூசகர்கள் ஐம்பதின்மர் சிவபூசை புரிவர்.

காலை 9-00 மணி

வரவேற்புரை :

திரு. இ. எஸ். கணபதி, பி. இ., மயிலாடுதுறை.

வாழ்த்துரை :

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து அதிபர், கயிலை மாமுனிவர்

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித்

தம்பிரான் சுவாமிகள்.

விரிவுரை :

வித்துவான் திரு. மு. வைத்தியநாதன், திருச்சி.

— முத்திநிச்சயம்

டாக்டர் திரு. வீ. நாகராசன், திருச்சி.

— பிராசாதசட்கம்

டாக்டர் திரு. சு. சுவாமிஐயா, சிதம்பரம்.

— நவரத்தினமாலை

காலை 10–30 மணி ஸ்ரீ சொக்கநாதப்பெருமான் வழிபாடு.
பகல் 12-00 மணி ஸ்ரீ ஞானபுரீசுவரர் வழிபாடு.
நண்பகல் 1–00 மணி மாகேசுவரபூசை.

16—5—90 புதன்கிழமை] [மாலை 5–30 மணி

வரவேற்புரை :

வித்துவான் திரு. வி. சா. குருசாமிதேசிகர், எம். ஏ., தருமபுரம்.

சிறப்புரை :

அறப்பணிச்செல்வர்
டாக்டர் திரு. கே. அரங்கசாமி பிள்ளை, சிதம்பரம்.

விரிவுரை :

திரு. இரா. மருதநாயகம், எம். ஏ., தருமபுரம்.

— தசகாரிய அகவல்

மாலை 7-00 மணி

இன்னிசை

தருமை ஆதீன இசைப் புலவர்
சீகாழி டாக்டர் திரு. கோ. சிவசிதம்பரம் குழுவினர்
சென்னை.

இரவு 10-00 மணி

தருமை ஆதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகள்

பட்டினப் பிரவேசம்

உ

குருபாதம்

ஞானசம்பந்தம்

மலர் 49 ★ இதழ் 6

தருமை ஆதீனத் திங்கள் இதழ்

பிரமோதூத - சித்திரை - 10—5—1990.

பொன்தயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்தயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினுய்! கூடல்ஆல வாயிலாய்!
நின்தயங்கி யாடலே நினைப்பதே நியமமே.

— திருஞானசம்பந்தர்.

தருமைக் குருபூஜை தரிசிக்கவருக!

" சித்தி தருநாதன் தென்கமலை வாழ்நாதன்
பத்தி தருநாதன் பரநாதன் — முத்திப்
பெருநாதன் ஞானப் பிரகாசன் உண்மை
தருநாதன் நம்குருநா தன்.

— குருஞானசம்பந்தர்

குருபூஜை விளக்கம் :

திருக்கயிலாய பரம்பரை, தருமை ஆதீனத்தில் கோயில் கொண்டு அருள்பாலித்துவரும் அருள்மிகு ஞானம்பிகை உடனமர் அருள்மிகு ஞானபுரீசுவரர் திருக்கோயில் பெருவிழாவும், தருமை ஆதீனம் குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக பரமாசாரியசுவாமிகள் தம்ஞானசாரியர் கமலைஞானப்பிரகாச தேசிக மூர்த்திகளுக்கு ஆண்டு தோறும் நிகழ்த்தி வந்தகுருபூசைப் பெருவிழாவும், ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்தருக்குப் பின்வந்தோர்

'மாகேசுவரபூஜை' என்றபெயரில் நடத்திவந்தகுருபூஜைவிழாவும், குருஞானசம்பந்தர் குருபூஜைப் பெருவிழாவை ஒட்டியதிருநெறிய தெய்வத் தமிழ் மாநாடும் 6—5—1990 ஞாயிற்றுக்கிழமை முதல் 16—5—90 புதன்கிழமைமுடிய தருமைஆதீனத்தில் மிகச்சிறப்பாக நடைபெற்று வருகின்றன. செந்தமிழ் வளர்ச்சியிலும், சிவநெறி மலர்ச்சியிலும், சைவ மரபுகளைப் பேணிக்காப்பதிலும்பெருநாட்டம் உடையவர்களாய், தருமை ஆதீனம் 26 ஆவது குருமூர்த்திகளாய் எழுந்தருளியிருந்து அருளரசு ஒச்சிவரும் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் ஆதீனக் குருபூஜைப் பெருவிழாவை மிகச்சிறப்பாக ஆண்டு தோறும் நிகழ்த்தி வருவது போன்றே நிகழாண்டிலும் நிகழ்த்தத் திருவுளம் கொண்டுள்ளார்கள். சைவப்பேரன்பர்களும், தமிழ்ஆர்வலர்களும் ஆதீன அடியவர்களும் ஆதீனக் குருபூஜை விழாவில் பங்கேற்றுக் குருவருளும் திருவருளும் பெற்று உய்ய ஞானசம்பந்தம் அன்புடன் அழைப்பு விடுக்கிறது.

கமலை ஸ்ரீ ஞானப்பிரகாசர் :

திருக்கயிலாய பரம்பரையில், திருவாரூரில் வீற்றிருந்து அருளுபதேசம்செய்துவந்த பேரருளாளர் கமலை ஞானப்பிரகாசர். கமலை ஸ்ரீ ஞானப்பிரகாசர் சரியை, கிரியை, யோகம், ஞானம் முதலிய நான்கு நிலைகளையும் விளக்கும் அருள் நூல்கள் பல அருளியவர்கள். திருஆனைக்காவிற்குத் தந்திவன புராணமும், திருமழபாடிக்குத்திருமழுவாடிப் புராணமும்இவர்களால்இயற்றப் பெற்றன. இவர்கள் வாழ்வில் சிவனருளால் நிகழ்ந்த அருளற்புதங்கள்பல. இவர்களிடம் அருளுபதேசம் பெற்ற மாணுக்கர்பலர். அவர்களுள் முதல்வர் ஸ்ரீ குருஞானசம்பந்தர். அதிதீவிர பக்குவியாகத் திகழ்ந்த ஸ்ரீ குருஞானசம்பந்தரைத் தருமையில் திருமடம் காணுமாறு பணித்தனர் கமலை ஸ்ரீ ஞானப்பிரகாசர். ஞானாசிரியரின் அருளாணைக்கு உட்பட்டு ஸ்ரீ குருஞானசம்பந்தர் தருமையில்தம் ஞானாசிரியர் திருப்பெயரால் ஸ்ரீ ஞானப்பிரகாசன் திருமடம் அமைத்தார். இதுவே, பிற்காலத்தில் தருமை ஆதீனம் என வழங்கலாயிற்று.

ஞானப்பிரகாசன் திருமடம் :

தருமை ஆதீனம் ஸ்ரீ ஞானப்பிரகாசன் திருமடம் என்றே தொடக்க காலத்தில் வழங்கியமை வரலாற்று ஆய்வுகளால் புலனாகிறது. ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருளிய பண்டாரக் கலித்துறை எனும் ஞானப்பிரகாசமாலையுள், பத்தொன்பதாம் பாடல்,

" கவுளிய மார்க்கம் கலந்தழித் தோன்கம லாலயத்தோன்
இவுளி நரித்திர ளாக்கிவைத் தோன் இசைப் பாணருக்குப்
பவுளி யுரைத்தருள் ஞானப்ர காசன் பயில்மடத்தில்
கெவுளி யுரைக்கும் பதிபசு பாசத்தின் கேள்விகளே '

'ஞானப்பிரகாசன் பயில்மடம்' எனக்குறிக்கிறது, சிவபோக சாரத்தனிப்பாடல் ஒன்று,

'ஆய்வார் பதிபசு பாசத்தின் உண்மையை ஆய்ந்தறிந்து
காய்வார் பிரபஞ்ச வாழ்க்கை யெல்லாம் கல்விகேள்வி யல்லல்
ஒய்வார் சிவானந்த வாரியுள் ளேயொன் றிரண்டுமறத்
தோய்வார் கமலையுள் ஞானப்ரகாசன்மெய்த் தொண்டர்களே

என அமைகிறது அது. ஆதீன அடியவர்கள் தம்மை 'ஞானப் பிரகாசன் மெய்த்தொண்டர்கள்' எனக் குறித்துக் கொள்ளுதல் நினைவு கூறத்தக்கது. மேலும்,

" மதுராபுரிச் சொக்க ஞானப்பிரகாசன் மடாலயத்தில்
சதுரானகாரியம் செய்தசெல்லே இந்தத்தாரணியில்
முதிரா இளம்பிஞ்சை நற்கனியாக்கும் முறைமை என்னே
எதிராமல மறுத்து என்னையும் ஆட்கொண்டு இருந்தனனே "

என்ற சீடர்பாடலும் தெளிவித்தல் காணலாம்.

இருபெரும் குருபூஜைகள் :

தருமை ஆதீனத்தில் நிகழ்த்தப்பெற்றுவரும் குருபூஜைப்பெரு பெருவிழா அடுத்தடுத்து இருபெரும் அருளாளர்களுக்குநிகழ்த்தப் பெறும் குருபூஜைவிழா என்பது மரபுணர்ந்தோர்கள் அன்றிமற்றை யோர் அறிந்திலர். தருமைக் குருமணி அவர்கள் இம்மரபு நுட் பத்தை அனைவரும் அறியின் குருபக்தி மேலிடும் என்ற நோக்கில், ஆதீன சம்பிரதாயங்கள், சம்பிரதாயத் திருமுகங்கள், நடைமுறை மரபுகள் யாவும் மேற்குறித்த நுட்பத்தை உறுதி செய்வதை இவ் வையகமும் உணர்ந்துய்ய இவ்விதழில் வெளியிடப்படுகிறது. வைகாசித்திங்கள் தேய்பிறை சஷ்டி திதியில் கமலை ஸ்ரீ ஞானப் பிரகாசதேசிக சுவாமிகள் குருபூஜைத்திருநாள். மறுநாள். சப்தமி யில் ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்தர் குருபூஜைத் திருநாள். இவ் வாண்டு கமலை ஸ்ரீ ஞானப்பிரகாசர் குருபூசை விழா 15—5—90 செவ்வாய்க்கிழமை அன்றும் ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக சுவாமிகள் குருபூஜை 16—5—90 புதன்கிழமை அன்றும் அமை கின்றன. குருஞானசம்பந்தர் குருபூஜைதான் இதுகாறும்

மாகேசுவரபூஜை என்ற பெயரில் நடந்து வந்தது. புதன்கிழமை குருஞானசம்பந்தமூர்த்திகளின் குருபூசையாகிய மாகேசுவரபூசையும், பட்டினப்பிரவேசமும் சிறப்புற நிகழும். திருவருளும், குருவருளும் துணைநிற்க எல்லோரும் மரபுணர்ந்து வழிபட இவ்வாண்டு முதல் இம்முறையில் தொடர்ந்து நடைபெறும். ஸ்ரீ குருஞானசம்பந்தர் தம் ஞானாசிரியர் கமலை ஸ்ரீ ஞானப்பிரகாச தேசிகர்க்கு நிகழ்த்திய குருபூஜை விழாவிலும் ஸ்ரீ குருஞானசம்பந்தருக்குப் பின் வந்தோர் மாகேசுவரபூசை என்ற பெயரில் நடத்திய குருபூசைவிழாவிலும் ஆதீன அடியவர்கள் பங்கு பற்றித் திருவருளும், குருவருளும் பெற வேண்டுகின்றோம்.

ஞானநூல் தானம் :

தருமைஆதீனக் குருமுதல்வர் ஸ்ரீ குருஞானசம்பந்தர் தம்மை நாடி வந்த பக்குவிகளுக்கு அருளுபதேசம் செய்ததோடு அருள் ஞானநூல்கள் பல இயற்றியருளியவர்கள். இவர்கள் இயற்றிய நூல்கள் சிவதோத்திரம், குருதோத்திரம், சைவசித்தாந்தம், யோகம், உரைவிளக்கம் எனப் பல்வேறு திறத்தன. சொக்கநாத வெண்பா முதலியன சிவதோத்திரம். சிவபோகசாரம் ஞானப்பிரகாசமாலை முதலியன குருதோத்திரம், திரிபதார்த்தரூபாதி தசகாரிய அகவல் முதலியன சைவசித்தாந்தம், முத்திநிச்சயம் ஆன்மானந்தவாதிகளுக்குக்கண்டனம். சோடகலாப்பிரசாதசட்கம் யோகநூல், ஞானாவரண விளக்கம் சிவஞானசித்தியாருக்கு செய்யுள் வடிவில் அமைந்த உரைவிளக்கம். இவை எல்லாம் உபதேச மரபில் ஞான - அருளனுபவப் பெட்டகமாகத்திகழ்வன.

வருக ! அருள் பெறுக !

சிவராஜதானியாம் தருமை ஆதீனத்தில் இவ்வாண்டு அனைத்துலக சைவசித்தாந்த ஆராய்ச்சி நிறுவனத்தின் சார்பில் முதல் மூன்றுநாள் கருத்தரங்கமும், தொடர்ந்து நான்கு நாட்கள் ஆராய்ச்சி நிறுவனத்தின் பல்வேறு பயிற்சி மையங்களில் இருந்து வரும் பயிற்சியாளர்களுக்குப் புத்தொளிப் பயிற்சி வகுப்பும் நிகழ்த்தப் பெறுகின்றன. பல்வேறு கலை அங்கங்களுடன் அறிஞர் பெருமக்கள் பங்கேற்கும் திருநெறிய தெய்வத் தமிழ் மாநாடும் நிகழ்கிறது. ஆதீன அன்பர்கள் தருமை வருக; திருவருளும் குருவருளும் பெறுக என அன்புடன் அழைக்கின்றோம்.

தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருவின் திருநாமம் செப்பல்
தெளிவு குருஉரு சிந்தித்தல் தானே. — திருமூலர்

உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமை ஆதீனம்
26 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

திருவதிகையில் நடைபெற்ற நான்காம் திருமுறை
வேள்வி முற்றோதல் நிறைவில்
வழங்கியருளிய

ஆசியுரை

29—4—1990

பதிகம் ஏழெழுநூறு பகரும் மாகவியோகி
பரசுநாவரசான பரமகாரண ஈசனி
அதிகை மாநகர் மேவி அருளினால் அமண்மூடர்
அவர்செய் வாதைகள் தீரும் அனகனி வார் கழல்சூடின்
நிதியராகுவர்; சீர்மை உடையராகுவர், வாய்மை
நெறியராகுவர், பாவம் வெறியராகுவர், சால
மதியராகுவர், ஈசன் அடியராகுவர், வானம்
உடையராகுவர், பாரில் மனிதரானவர் தாமே.

— நம்பியாண்டார் நம்பிகள்.

திருவதிகை - திருப்பணிக் குறிப்பு !

அறம் தரும் நாவுக்கரசும் ஆலாலசுந்தரரும் பிறந்தருளும் பெருமைக்குரியது திருமுனைப்பாடிநாடு. முனை அரையர்கள் ஆட்சி செய்தமையால் முனைப்பாடி நாடு எனப்பெற்றது. இதுவே நடுநாடு என்று பேசப் பெறுகிறது. இது தொண்டை நாட்டிற்கும் சோழ நாட்டிற்கும் நடுவே இருப்பதனால் இப்பெயர் பெற்றிருக்கலாம். முனை அரையர், போர்முனையில் பேரரசர்களுக்குத் தளபதியாக இருந்து வெற்றிதேடித் தந்தமையால் அத்தகைய பெயர் பெற்றவராகச் சொல்லலாம். அத்தகைய முனைப்பாடி நாட்டில் பெருந் தலமாக விளங்குவது திருவதிகை வீரட்டானம் ஆகும். இத்தலம் திருபதுங்க பல்லவ மன்னன் காலத்தில் அதிஅரைய மங்கலம் என்றும், முதலாம் இராசேந்திரன் காலத்தில் அதிராசமங்கலம்

என்றும், முதற் குலோத்துங்கசோழன் காலத்தில் அதிராசமங்கலிய புரம் என்றும், காலிங்கராயன் திருப்பணிகளைக் குறிக்கும் கல்வெட்டுப் பாடல்களில் அதிகை என்றும் குறிக்கப்பெறுகிறது. இத்தலத்துத் திருக்கோயிலை, நிருபதுங்கதேவரின் 13ஆம் ஆண்டில் முனைப்பாடி ஆமூர்பெருங்குளத்தில் வாழ்ந்துவந்த முனைப் பேரரையர் மகன்முனையர்கோன் இளவரையர் புதுப்பித்தார். கேரள வம்சத்து ரவிவர்ம மகாராஜர் ஆன பெருமாள் குலசேகரதேவர், இக்கோயிலின் வான்கயிலாயத் திருமாளிகையை ஸ்தூபி பரியந்தம் திருமஞ்சனம் பண்ணிப் புறச்சாருணைத் திருக்கல்லும் சாத்தி அருளினர். இது நிகழ்ந்த காலம் கி. பி. 1313 ஆகும். அம்பிகை எழுந்தருளியிருந்த திருக்காமக் கோட்டத்தை முதற் குலோத்துங்க சோழன், விக்கிரம சோழன் ஆகியோரின் படைத்தலைவராய் இருந்த கூத்தர் காலிங்கராயர் கட்டினர். இவர்வீரட்டானேஸ்வரம் உடையார் கோயிலைப் பொன்வேய்ந்தார். மேலும் திருநாவுக் கரசருக்குத் திருவதிகைத் திருக்கோயிலுக்குள் ஈசான்யபாகத்தில் ஒரு தனிக்கோயிலும் கட்டினர். இச்செய்திகள் வீரட்டானத் திருக் கோயில் கல்வெட்டுப் பாடல்களில் காணப்படுகின்றன.

திருக்கயிலாய அமைப்பு :

இன்று திருவதிகைத் திருக்கோயிலில் அம்பிகைக்குரிய காமக் கோட்டம் பழுதடைந்துவிட்டதனல் சுவாமி கோயிலை ஒட்டியே வலப்பாகத்தில் பிற்காலத்தில் ஒரு அம்பிகைக் கோயில் கட்டப் பெற்றுள்ளது. சுவாமிகோயிலின் கருவறைக்கு உள்ளேயே ஒரு பிராகாரம் உள்ளது. இது கயிலாயத்தில் உள்ள அமைப்புப் போன்றது. இப்பிராகாரம் இன்றஇருபுறமும் அடைக்கப்பட்டுள்ளது. இங்ஙனம் கருவறைக்குள்ளேயே பிரகாரம் உள்ள அமைப்பு தஞ்சைப் பெரிய கோயிலிலும் கங்கைகொண்டசோழபுரக் கோயி லிலும் உள்ளன.

திருஅதிகை - பெயர்க்காரணம் :

இத்தலத்திற்குத் திருவதிகை என்ற பெயரும், இறைவன் எழுந்தருளியுள்ள திருக்கோயிலுக்கு வீரட்டானம் என்ற பெயரும் இருந்திருக்கக்கூடும் என்று தோன்றுகிறது. இத்தலத்திற்குத் திருவதிகை என்ற பெயர் வந்தமைக்குரிய காரணத்தைச் சிந்திக்க வேண்டுவது அவசியமாகும். அதிராஜன், அதிஅரையன் என்ற பெயர்கள் இருப்பதைக் கொண்டு தகடூரைத் (தருமபுரி) தலை நகராகக் கொண்டு ஆட்சிசெய்தவனும், அவ்வைக்கு நெல்லிக்கனி அளித்தவனும், கடைஎழுவள்ளல்களில் ஒருவனுமாகிய அதியமா னோடு இத்தலம் தொடர்புடையதாக இருக்கலாம் எனத் தோன்று

கிறது. அதியமானின் ஆட்சி இத்திருவதிகை எல்லைவரை பரவி யிருந்தது என்று ஒரு செவிவழிச் செய்தி கிடைக்கிறது. இது காரணமாக இவன் பெயரால் அதிஅரையன் என்று இருந்து, பின்னர் அதிகை என்று மருவியிருக்கக்கூடும் எனத் தோன்றுகிறது. திருவதிகை என்னும் இவ்வூர் பண்ரெட்டி நகராட்சியின் கீழ் எல்லையில் அமைந்துள்ளது. இங்குப் பண்ருட்டி என்னும் ஊர்பற்றிய காரணத்தைச் சிந்திப்பதும் பொருத்தமாகும். ஆந்திர (தெலுங்கு) நாட்டில் இருந்து ரெட்டியார்கள் பலர் வாழ்வு தேடித் தமிழகம் வந்தனர். அவர்களில் விவசாயத் தொழில் செய்யும் ரெட்டிகள் இங்கே குழுவாகத் தங்கி வாழத் தொடங்கினர். அத்தகைய ரெட்டிகள் பண்டரெட்டி எனப் பெயர் பெற்றனர். பண்டரெட்டி என்றால் விவசாயம் செய்யும் ரெட்டியார் என்று பொருள். அவர்கள் வாழ்ந்த இப்பகுதி பண்டரெட்டி எனப் பெயர் பெற்று வழங்கி வந்தது. பின்னே அது பண்ரெட்டி எனத் திரிந்து மேலும் பண்ணுருட்டி எனத் திரியலாயிற்று.

அட்ட வீரட்டானம் :

வீரட்டானம் என்பது இறைவன் வீரத் திருவிளையாடல்கள் புரிந்த இடங்களைக் குறிப்பதாகும். அங்ஙனம் உள்ள தலங்கள் எட்டு. இத்தலங்களைப்,

> பூமன்சிரங் கண்டி அந்தகன் கோவல் புரமதிகை
> மாமன் பறியல் சலந்தரன் விற்குடி மாவழுவூர்
> காமன்குறுக்கை யமன்கடவூர் இக்காசினியில்
> தேமன்னு கொன்றையும் திங்களும் சூடிதன் சேவகமே.

என்னும் பாடல் குறிப்பிட்டு விளக்கும். இவற்றில் திரிபுரத்தை எரித்த திருவிளையாடல் நிகழ்ந்த இடம் இத்தலமாகும். இதில், 1,300 ஆண்டுகளுக்கு முன்பு திருநாவுக்கரசர் இறைவனால் சூலை நோய் தரப்பெற்று ஆட்கொள்ளப் பெற்றார். சூலை நோய் நீங்கும் பொருட்டு இத்தலத்தில் அவர்பாடியருளிய திருப்பதிகம் நான்காம் திருமுறையில் இடம் பெற்றுள்ளது.

திருவதிகையில் முதல்பதிகம் :

திருநாவுக்கரசர், திருவாமூரில் புகழனாருக்கும் மாதினியாருக் கும் அருமகவாக உதித்தார். இவரின் தமக்கையார் திலகவதியார். நாவரசர் நல்லாறு தெரிந்துணர நம்பர் அருளாமையினால் சமண சமயச் சார்புற்றார். திலகவதியாரின் வேண்டுகோள் தூண்ட இறை யருளால் சூலைநோய் வாய்க்கப்பெற்றுத் திருவதிகை வந்து,

திலகவதியார் திருக்கரத்தால் திருநீறு அளிக்கப் பெற்றுப் பெரு வாழ்வு வந்தது என மகிழ்ந்தணிந்தார். ஆண்டவன் உள்நின்று உணர்த்தப் பதிகம் பாடியருளினர். அப்பொழுது பாடியருளிய பதிகமே 'கூற்றாயினவாறு' என்று தொடங்கும் பதிகமாகும். முதலில் இவர் பாடியருளிய பதிகம் இது.

நான்காம் திருமுறை :

நான்காம் திருமுறையில் மொத்தம் 113 பதிகங்கள் உள்ளன. இவற்றில் முதல் திருப்பதிகம் கொல்லிப் பண்ணில் அமைந்துள்ளது. பண் அமைப்பில் கொல்லிப்பண் 1, காந்தாரம் - 6, பியந்தைக் காந்தாரம் 2, சாதாரி 1, காந்தார பஞ்சமம் 2, பழந்தக்கராகம் 2, பழம்பஞ்சுரம் 1, இந்தளம் 3, சீகாமரம் 2, குறிஞ்சி 1 ஆகிய 21 பதிகங்களே உள்ளன. திருநேரிசை 58ம், திருவிருத்தம் 34ம் ஆக 92 பதிகங்களும் யாப்பமைதியில் உள்ளன. திருவிருத்தம் 34ல் முதலில் உள்ள "பாளையுடை" என்ற பதிகமும், கருநட்டகண்டனை என்ற பதிகமும் கொல்லிப்பண் என்று குறிக்கப்பட்டுள்ளன.

தேவாரம் :

இவர் பாடியருளிய 4, 5, 6-ம் திருமுறைகளைத் தேவாரம் என்பர். திருஞானசம்பந்தர் பாடியருளியதைத் 'திருக்கடைக் காப்பு' என்றும், சுந்தரமூர்த்தி சுவாமிகள் பாடியருளியதைத் 'திருப்பாட்டு' என்றும் குறிப்பது வழக்கம். 10 பாடல்கள் பாடி 11ஆவது பாடலில் பாடல்களின் பயனையும், பாடியருளிய தன்னையும் குறித்துப் பாடும் அமைப்பிற்குத் திருக்கடைக் காப்பு என்று பெயர். தேவாரம் என்பது, தே+ஆரம் எனப் பிரித்து, தெய்வத்தின் மேல் பாமாலையாகச் சூட்டி மகிழத்தக்கது என்னும் பொருளையும், தே+வாரம் எனப் பிரித்துத் தெய்வத்தினிடத்து அன்பு செலுத்த உதவுவது, — அன்பைவிளைவிப்பது என்னும் பொருளையும் உடையது. 'திருப்பாட்டு' திருவை — அதாவது இறைவனை அடையத் தக்க நெறிகளைப் போதிக்கும் பாடல் என்னும் பொருளது. இக்கருத்தில் ஞானசம்பந்தர் தன்னைப் பாடினார் என்றும், அப்பர் என்னைப் பாடினார் — அதாவது இறைவனைப் பாடினார் என்றும், சுந்தரர் பொன்னைப் பாடினார் என்றும் கூறுவர். பொன்னைப் பாடினார் என்றால் பொன்னார் மேனியனாகிய இறைவனிடத்துப் பொன் வேண்டிப் பாடினார் என்பது பொருள்.

அற்புதத் திருப்பதிங்கள் :

நான்காம் திருமுறையில் பாடல் பெற்ற தலங்கள் 50 உள்ளன. அற்புதத்திருப்பதிகங்களாக — 9 பதிகங்களுள்ளன. 1. சூலைநோய்

நீக்கப் பாடியருளியது 2. நீற்றறையில் இட்டபொழுது பாடியருளியது, 3. யானையை விட்டு இடறச் சொன்னபோது பாடியருளியது. 4. கல்லோடு கட்டிக் கடலில் வீழ்த்திய பொழுது பாடியுய்ந்தது. 5. மறைக்கதவம் திறக்கப் பாடியருளியது. 6. மூத்த திருநாவுக்கரசை உயிர்ப்பிக்கப் பாடியருளியது, 7. சூலக்குறி, இடபக் குறி பொறிக்க வேண்டியது. 8. திருச்சத்தி முற்றத்தில் திருவடி சூட்ட வேண்டிப் பாடியருளியது. திருநல்லூரில் திருவடி சூட்டப் பெற்றது 9. திருக்கயிலைக் காட்சியை ஐயாற்றில் கண்டு வழிபட்டுப் பாடியருளியது என்பன.

இந்த நான்காம் திருமுறையில் இன்னும் ஒரு சிறப்பு உண்டு. இதில் தான் யாப்பமைதிப் பாடல்களும், பண்கள் பொருந்திய பாடல்களும் உள்ளன. 5 ஆம் திருமுறை, திருக்குறுந்தொகை; ஆறும் திருமுறை, திருத்தாண்டகம். இவை இரண்டும் யாப்பு அமைதியுடன் உள்ளவை.

கூற்றாயினவாறு - கூற்று :

இனிக் ' கூற்றாயினவாறு ' என்று தொடங்கும் பதிகம் முதல் சில பதிகங்களின் பொருளைப் பற்றிச் சிந்திப்போம்.

இம் முதல் பதிகம் கொல்லிப் பண்ணில் அமைந்தது என்பது முன்னரே சிந்தித்தோம். இப்பண் இறைவனின் திருவுளத்திற்கு உகந்தது என்று அப்பர் குறிக்கின்றார். " கொல்லியாம் பண் உகந்தார் குறுக்கை வீரட்டனாரே " என்பது அத்தொடர். இப் பண்ணிலேயே இவர் தம் முதல் பதிகத்தைப் பாடியருளியது குறிக்கத்தக்கது. இப்பதிகத்தில் வரும், ' கூற்றாயினவாறு ' என்பதற்கு இருபொருள் காணலாம் கூற்று என்பது உடலையும் உயிரையும் வேறுபடச் செய்கின்ற கூற்றுவனைக் குறிக்கும் சொல் என்று கொண்டு, அவ் எமன் வந்து நலிய வைக்கும் பொழுது ஏற்படும் துன்ப அளவுக்கு இப்பொழுது துன்புறுகின்றேன் என்று ஒரு பொருள்; அப்பர் பெருமான் திருக்கயிலையில் வாகீச முனிவராக விளங்கிய காலத்தில், இராவணனின் கரங்கள் கயிலைமலையின் அடியில் இறைவன் அருளால் சிக்கிக் கொண்டு துன்புற்ற பொழுது அவனின் நிலை கண்டு இரங்கி, அவன் துன்பம் நீங்கித் தப்பிக்கும் வண்ணம், 'இறைவன் சாமகானப்பிரியன்' என்று கூறிவிடுகின்றார். உடனே இராவணன் தன் தலை ஒன்றையும் தன் கை நரம்பையும் கொண்டு யாழ் இசைத்துப் பாடி இறையருளால் நாளும் வாளும் பெற்றுப் போயினான், இவ்விடத்தில் இறைவன் திருவுள்ளம் அறியா வகையில் வாகீசர் இராவணனுக்கு உதவியமையினால் இங்கு வந்து பிறக்கும்படிநேர்ந்தது. எனவே அங்குநான் கூறிய ஒருகூற்று, இங்கு

இவ்வண்ணம் ஆயினவாறு என்று கூறுவது பிறிதொரு பொருள். கூற்று என்பதற்குச் 'சொல்வது' என்னும்பொருள், தலைவன்கூற்று தலைவி கூற்று என்னும் இலக்கண நூல்களில் வருவது கொண்டு உணரலாம். கூற்ருயினவாறு இது; இதனை விலக்கிலீர்; என்ருர். கயிலையிலும், மண்ணிலும் இதுவரை கொடுமை பல செய்தேன் என்றும் கூறினர். இராவணனுக்கு உதவியதும் சமணசமயம் சார்ந்ததும் கொண்டு இங்ஙனம் கூறுகிருர். இவைகளை எல்லாம் நான் அறியாது செய்தேன் என்பார், 'கொடுமைபல செய்தன நானறியேன்' என்ருர். இந்நிலையில் இறைவனே என்னை ஏற்றுக் கொண்டார் என்பார், ''ஏற்ருய்'' என்ருர். இனி, இரவும் பகலும் பிரியாது உன்னைத் தொழுவேன் என்பார், '' அடிக்கே இரவும் பகலும்எப்பொழுதும் பிரியாதுவணங்குவன்'' என்ருர். அடுத்துவரும் இப்பாடல் வரிகளில் வயிற்றுவலியின் துன்பத்தைக் கூறுகின்ருர்.

உண்மைப் பொருள் :

அடுத்து வரும் பாடல்களில் ''நெஞ்சம் உமக்கே இடமாக வைத்தேன், நினையாதொரு போதும் இருந்தறியேன்'' '' சலம் பூவொடு தூபம் மறந்தறியேன் '' ''தமிழோடு இசைபாடல் மறந்தறியேன்'' என்றும் கூறியிருக்கிருர். சமண்சமயத்தில் இருந்த போது எப்படி இதுபோல் இருந்திருக்க முடியும் என்று சிலரும், அப்பர் வஞ்சனையாக மனத்தளவில் சிவப்பற்றுடையவராயிருந்து சமண் சமய விஷயங்களை அறிந்து கொள்ளவே சமண் சமயம் சார்ந்து தெரிந்த பிறகு சைவம் மீண்டார் என்று சிலரும் அறியாமையால் பிதற்றுகின்றனர். முதல் பாடலைச் சரியாகப் படித்தால், இக்கருத்துத் தெளிவாகிவிடும். அப்பாடலைச் சரியாகப்படிக்காததே பிதற்றுதலுக்குக்காரணமாகிறது. முதற்பாடலில், ஏற்ருய் அடிக்கே என்கிருர். ஏற்ருய் என்பது இறந்தகாலம். இறைவன் இவர்தம் பிழை நீக்கி ஏற்றபிறகே இரவும், பகலும், எப்பொழும் பிரியாது வணங்குவன் என்கின்ருர். இம்முதற்பாடலில் இவர் இறைவன் ஏற்றவுடனேயே பிரியாது வணங்குவன் என்று சொல்கிருர். வணங்குவன் என்பது எதிர்காலம். ஏற்ற அந்நொடிக்குப் பின் நெஞ்சம் உமக்கே இடமாக வைத்தேன், சலம்பூவொடு தூபம் மறந்தறியேன், என்பதிலிருந்து இவரை இறைவன் ஏற்ற பிறகே இச்செயல்கள் நாவரசரிடம் நிகழ்ந்தன என்பது தெளிவாகிறது.

அப்பரின் மன உணர்வு :

அப்பர் பெருமான், தான் சமணசமயச் சார்பில் இருந்தமையைத் தவறு என உணர்ந்து பல முறையும் வருந்திப் பாடுகின்ருர். சிதம்பரத்திற்கு வந்தபொழுது அத்தலம் புண்ணியத்தலம் ஆதலின் அதன் நான்கு வீதிகளிலும் தன் திருமேனி சமணசமயம்

சார்ந்திருந்த அருவருப்பு நீங்க வேண்டும் என்று கருதி அங்கப் பிரதட்சணம் செய்கின்றார். தன் திருமேனியில் சிவத்தைச் சார்ந்த அடையாளமாகச் சூலக்குறியும், இடபக்குறியும் பொறிக்க வேண்டுகின்றார். திருத்தூங்கானை மாடத்தில், "பொன்னார் திருவடிக்கு ஒன்று உண்டு விண்ணப்பம்" என்று வேண்டுகின்றார். திருச்சத்தி முற்றத்தில் மேலும் வேண்டுகின்றார். திருவடி சூட்டியருளக எனகிறார். இறைவன், "நல்லூருக்கு வா" என்று அழைக்க அங்குச் சென்று திருவடி சூட்டப் பெறுகிறார். சமண்விட்டுச் சைவம் சார்ந்தவுடனேயே திருவதிகையில் ஏழைத் திருத்தாண்டகம் என்ற ஒன்றைப் பாடுகின்றார். அதில் சமணத்தில் இருந்தபோது இழந்த குறிப்புக்களைப் பாடியுள்ளார். ஒவ்வொரு பாடல் இறுதியிலும் "ஏழையேன் நான் பண்டு இகழ்ந்தவாறே" என்று இங்ஙனம் சமணச் சார்பினை எண்ணி எண்ணி இரங்கி வருந்தியவர், அதற்குப் பரிகாரமாக அங்கப்பிரதட்சிணம் முதலிய பலவற்றையும் செய்துள்ளார். இறைவன் திருநல்லூரில் திருவடி சூட்டிய பிறகுதான் ஓராற்றான் மன அமைதியுறுகிறார். இவற்றாலெல்லாம் அப்பர் தூயவாழ்வு துவங்குவதைக் காணலாம்.

அகச்சான்று :

இவர் வாழ்வில் நிகழ்ந்த அற்புதங்களுக்கு அகச் சான்றுகள் பல உள்ளன. எ-கா.

" கல்துணைப்பூட்டி ஓர் கடலில் பாய்ச்சினும்
நற்றுணையாவது நமச் சிவாயவே. "

என்ற ஓதுகிறார். இப்பாடலைப் படிப்பவர்களில் சிலர் இது, கல்லோடு கட்டிக் கடலில் போட்ட பிறகு பாடியது அன்று என்றும், எனவே இது கொண்டு வரலாற்றினை நிர்ணயம் செய்ய முடியாது என்றும் கூறுகின்றனர். இப்பாடல் அப்பர் பெருமானைக் கல்லோடு கட்டிப் போடுவதற்கு முன்னே அதனை உணர்ந்து, அறிந்து பாடியதுதான் என்பதில் ஐயம் இல்லை. ஆனால் அப்பெருமான் திருநீலக்குடிப் பதிகத்தில்,

" கல்லினோடு எனைப் பூட்டி அமண்கையர்
ஒல்லை நீர் புக நூக்க என் வாக்கினால்
நெல்லு நீள்வயல் நீலக்குடி அரன்
நல்ல நாமம் நவிற்றி உய்ந்தேனன்றே "

என்று வரலாற்றுக்குரிய அகச் சான்றைப் பாடி உள்ளார். எனவே, "சொற்றுணை வேதியன்" என்னும் பாடல் அச்செயல் நிகழ்வற்கு

முன்னே பாடி நமக்கு வழிகாட்டியது என்பதும், இப்பாடல் அந் நிகழ்ச்சியின் உய்ந்ததற்குப் பிறகு பாடியது என்பதும் தெளிய வேண்டிய உண்மைகளாகும்.

தில்லை வழிபாடு :

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகிய மூவரும் தில்லையைத் தரிசனம் செய்த பொழுது பெற்ற அனுபவம் ஒரு படித்தாக இருப்பதனை அவர்கள் பாடல் வழிக் கொண்டும், சேக்கிழார் வாக்கினை வைத்தும் உணரலாம். திருஞானசம்பந்தர் நடராஜப் பெருமானை வழிபாடு செய்த முறையினைச் சேக்கிழார் தெளிவுறக் கூறுகிறார்.

" நீலத்தார் கரியமிடற்றார் நல்ல நெற்றிமேலுற்ற
[கண்ணினார் பற்று
சூலத்தார் சுடலைப் பொடி நீறணிவார் சடையார் "

"சீலத்தார் தொழுதேத்து சிற்றம்பலம் " என்று ஞான சம்பந்தர் தில்லை வாழ் அந்தணர்களைக் குறிப்பிடுகிறார். பிள்ளையார், "அண்ணலார் தமக்கு அளித்த மெய்ஞ்ஞானமே ஆன அம் பலத்தையும், தம் உள் நிறைந்த ஞானத்து எழும் ஆனந்த ஒரு பெரும் தனிக்கூத்தையும் கண்ணின் முன்புறக் கண்டார் என்கிறார் சேக்கிழார். இதன் பயனாய் நடராஜப் பெருமான் தில்லைவாழ் அந் தணர்களின் திருவுருவில் அவருக்குக் காட்சி நல்கினார் என்பது புலனாகிறது.

அப்பர் அடிகள் அம்பலத்து இறைவனை வழிபாடு செய்தபோது ஒன்றி இருந்து நினைந்ததன் பயனாய்ப் பெருமான் புன்சிரிப்புடன் அபய கரத்தின்வழி, " என்று வந்தாய் " என்று உசாவுதாக உணர்ந்து பாடுகிறார். இறைவன் "என்று வந்தாய்", "எதற்கு வந்தாய்" என்று கேட்ட கேள்விகளுக்கு விடை அளிப்பவராக அப்பர், "பத்தனாய்ப் பாடமாட்டேன்" என்று தொடங்கும்பாடலில்

" அத்தா உன் ஆடல் காண்பான் அடியனேன் வந்தவாறே "

என்று கூறுகிறார்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் தில்லை இறைவனை வழிபட்டதைச் சேக்கிழார் "ஐந்து பேர் அறிவையும் கண்களே கொள்ளும்படி யாகவும், அளப்பரும் கரணங்கள் நான்கையும் சிந்தையே பெற்ற தாகவும் குணம் ஒரு மூன்றையும் சாத்துவிகமேயானதாகவும் அமைய அவர் வழிபட்டார் என்கிறார். இங்ஙனம் இம்மூவரும்

தில்லையை வழிபட்டபோது உயிர் ஒன்றிய நிலையில் அனுபவ உணர்வில் இருந்தனர் என அறிந்து இன்புறலாம்.

ஈகையின் சிறப்பு :

திருநாவுக்கரசு சுவாமிகள் இந் நான்காம் திருமுறையில் பல இடங்களில் சிறந்த உவமைகளையும், 96 தத்துவங்கள் பற்றிய குறிப்பையும் விளக்குகிறார். மேலும் பொருள் உடையோர் அப் பொருளைப்பிறருக்குக் கொடுத்து உதவுதலே அதன்பயன் என்றும், அதனால் அருள் கிட்டும் என்றும், அங்ஙனம் கொடாதோருக்குக் கடுநரகமே வாய்க்கும் என்றும் திரு ஐயாற்றுத் திருநேரிசையில் கூறுகிறார்.

" இரப்பவர்க் கீயவைத்தா ரீபவர்க் கருளும்வைத்தார்
கரப்பவர் தங்கட்கெல்லாங் கடுநர கங்கள்வைத்தார்
பரப்புநீர்க் கங்கைதன்னைப் படர்சடைப் பாகம்வைத்தார்
அரக்கனுக் கருளும்வைத்தா ரையனை யாறனாரே."

பொருள்உடைமையின் பயன்ஏழைக்குக் கொடுப்பதே என்னும் இக்கருத்து, திருவள்ளுவர் கூறும்,

" அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பொருள் வைப்புழி."

என்னும் திருக்குறளோடு இணைத்துச் சிந்திக்கத்தக்கது.

புண்ணியப் பணிகள் :

திருநாவுக்கரசு சுவாமிகள் பொது நேரிசையில், விளக்குப் போடுவதினால் ஏற்படும் பயனையும், மெழுகிடுவதினால் ஏற்படும் பயனையும், மலர் தொடுத்தலால் ஆயபயனையும் கூறுகிறார். ஒவ்வொன்றுக்கும் பயன் கூடிக் கொண்டு வருதலை அப்பாடல் கூறுகிறது.

" விளக்கினார் பெற்ற இன்பம் மெழுக்கினாற் பதிற்றியாகும்
துளக்கில்நன் மலர் தொடுத்தாற் றூயவிண் ணேறலாகும்
விளக்கிட்டார் பேறுசொல்லின் மெய்ந்நெறி ஞானமாகும்
அளப்பில கீதஞ்சொன்னார்க் கடிகள்தாம் அருளுமாறே"

என்பது அப்பாடல்.

ஐந்தெழுத்து மந்திரம் :

திருமுறை ஆசிரியர்கள் நமசிவாயத்தை மந்திரமாகக்கொள்ள வேண்டும் என்பதனை வற்புறுத்திக்கூறியுள்ளனர். அவ்வகையில்

திருநாவுக்கரசு சுவாமிகள் சாம வேதப்பிரியனாகிய சிவபெருமான் தன் மந்திரமாகிய நமசிவாயத்தை ஓதுவதோடு அன்றி, திருநீற்றை மருந்தாக எண்ணி நினைந்து அணிந்தால் வினையும்நோயும் அழலிற் பட்ட விறகாக வெந்து அழியும் என்றார். இதனைப் பொது நேரிசையில்,

" சந்திரற் சடையில்வைத்த சங்கரன் சாமவேதி
சுந்தரத் தமரர்பெம்மா னானல்வெள் ளூர்தியான்றன்
மந்திர நமச்சிவாய வாகிநீ றணியப் பெற்றால்
வெந்தறும் வினையுநோயும் வெவ்வழல்விறகிட்டன்றே "

என்று கூறுகிறார். இக்கருத்தினை, இந்நாலாம் திருமுறையில் "சொற்றுணை வேதியன்" என்ற பதிகத்தின் மூன்றும் பாடலில் விளக்கிக் கூறுகிறார்.

" விண்ணுற வடுக்கிய விறகின் வெவ்வழல்
உண்ணிய புகிலவை யொன்று மில்லையாம்
பண்ணிய வுலகினிற் பயின்ற பாவத்தை
நண்ணிநின் றறுப்பது நமச்சி வாயவே. "

என்பது அப்பாடல்.

வாழ்த்து :

இங்ஙனம் அருளாளர்கள் அருளியுள்ள திருமுறைகளை, ஒல்லும் வகை, பாடல் பெற்ற திருக்கோயில்களிலும் அற்புதங்கள் நிகழ்ந்த திருக்கோயில்களிலும் இடைவிடாது ஓதுவது, உடல் பிணியும், உயிர்ப் பிணியும் நீங்குவதற்குரிய வழியாகும். இதனை உணர்ந்து அன்பர்கள் பலர் இத்திருமுறை வேள்வியில் தொடர்ந்து கலந்து கொண்டு ஓதி வருவது மகிழ்ச்சிக்குரியது.

இத்திருமுறை வேள்வி தொடர்ந்து சிறப்புற நிகழவும், இவ் வேள்வியில் கலந்துகொள்ளும் மெய்யன்பர்களும், அப்பர்மரபினராய், இன்று அடியார்கட்கு மாகேஸ்வரபூசை செய்து உபசரித்த ஏரிப்பாளையம் திருநாவுக்கரசுப்பிள்ளை குடும்பத்தினரும் எல்லா நலன்களும் பெற்று நீடு இனிது வாழவும் ஸ்ரீ செந்தமிழ்ச்சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

திருநாவுக்கரசர் திருவடி வாழ்க.

திலகவதியார் திருவடி வாழ்க.

காவியத்தில் திருப்புமுனைகள்

டாக்டர். திரு. இரா. செல்வக்கணபதி,
எம். ஏ., பி. எட்., பிஎச். டி.,
தருமபுரம்.

(மலர் 49, இதழ் 5, பக்கம் 242 இன் தொடர்ச்சி.)

கம்பனின் உலகியல் :

பின்னிருந்து, முன்நிகழ்வைக் கணித்து, ஆத்திரப்படாது கைகேயியை மனம்மாறிய போதிலும் கூடத்தூமொழி மடமான் எனப் போற்றிய கம்பன், மீண்டும் காவிய உணர்விலிருந்து விடுபட்டுக்கதை நடத்தத்தொடங்கியபோது ஏசத் தலைப்படுகின்றான். அவள் மங்கலத்தைக் குலைத்துக் கொண்டு கிடக்கும் போது, இது குலமகளுக்குத்தகாதே என்று அவளை மூதேவிபோல் கிடந்தாள் எனப் பேசுகின்றான். இருவரங்கேட்டு நின்ற போது, 'தீயவை யாவையிலும் சிறந்த தீயாள் எனச் சினத்தில் வளர்ந்து நின்று பேசுகின்றான். கணவன் பலபட வேண்டவும் கைகேயி இரங்காமை கண்டு சினத்தின் உச்சிக்கே போகும் கவிஞன் கைகேயியை மட்டும் ஏசாமல் பெண்மையையே பழித்துரைக்கிறான்.

" வஞ்சனை கண்டு மடந்தை வேடம் என்றே
தஞ்சுஎன மாதரை உள்ளலார்கள் தக்கோர் "

என, பின்னர் மண்டோதரியையும், தாரையையும், சீதையையும் கற்பரசிகளாகக் காட்ட வேண்டிய கடமை இருப்பதையும் மறந்து 'பெண்மையே வஞ்சனையின் மறுவடிவம்' என மனம் கொதிக்கிறான். கணவன் சாக்காட்டுக்கே காரணமாகிறாள் என்று ஆத்திரம் வரும்போது, எவ்வளவு நியாயங்கள் கற்பித்தாலும் கணவன் சாக்காட்டுக்குக் காரணமாக மனைவி இருந்தாள் என்பதை ஏற்க மறுக்கும் கவிஞன்,

" கேகயத்து அரசன்பயந்த விடத்தை இன்னது ஓர் கேடு சூழ்
மாகயத்தியை ஊர்கொதித்து மனத்து வைவனபோன்றவே "

எனப் புட்கள் சிலம்புவதற்குக் காரணம் கற்பிக்குமிடத்துக் கைகேயியை 'மா கயத்தி' என்று கடுமையாகச் சாடுகின்றான். கயவன் என்ற ஆண்பாலுக்குக் கயத்தி என்ற பெண்பாற் சொல் படைத்து, கயமை மிகுதி தோன்ற 'மா' என்ற மிகுதிச் சொல் சேர்த்து விடுகின்றான்.

தெய்வமாக்கவி :

காவியங்களில் திருப்பு முனைகள் ஏனோதானோ என்று அமைந்து விடுவதும் இல்லை; கவிஞர்களால் அமைக்கப்படுவதும் இல்லை!

கதை நடத்துவது மட்டும் கவிஞனின் குறிக்கோளாக இருக்குமானால், அங்கே காவியப் பண்புகளைத் தேட இயலாது.

திருப்பு முனைகளால் காவியச் சுவை கூடுகிறது. தேங்கிக் கிடக்கும் கதை நடை போடத் தொடங்குகின்றது. குறிக்கோளை எய்தத் திருப்பம் இன்றியமையாது வேண்டப்படுகிறது. இந்தத் திருப்பத்தை அமைக்கும் பொழுது கூடக் கவிஞன், தொடர்புடைய பாத்திரங்களை இனங்கண்டு போற்றவும், தூற்றவும் வேண்டியுள்ளது. உலகியல் உணர்ந்து, உளவியல் பின்னணியில் விளைவுகளை இனங்காட்டிச் சமாதானமும் செய்ய வேண்டி வருகிறது.

காப்பியப் போக்கிலும் நோக்கிலும் கைகேயி செயலை நியாயப்படுத்திக் கம்பனால் கதை நடத்த முடிகிறது. ஆனால், கணவனின் சாவுக்கே மனைவி காரணமானாள் என்கிறபோது உலகியல் நோக்கில் சமூகம் அதனை ஏற்காது என அறிந்து, உலகினருள் ஒருவராக நின்று கைகேயியைக் கவிஞன் ஏசவும் வேண்டி வருகிறது. இங்கே எல்லாம் ஒருவன் வெற்றி பெற்று விட்டால் அவன் தெய்வமாகக் கவியாகவே உலகவரால் போற்றப் பெறுகின்றான்.

இரண்டாவது திருப்பம் :

கைகேயி விளைத்த காவியத் திருப்பு முனைக்குப் பின் ஏறத் தாழப் பன்னிரண்டு ஆண்டுகள் காவியத்தின் கதைப் போக்குத் தொய்ந்து விடுகிறது. இராமனின் காட்டு வாழ்வில் சுவையான காப்பிய நிகழ்வுகள் ஏதும் காணப்படவில்லை. ஆரணிய காண்டத்தின் பெரும் பகுதி சுவை குன்றி நடப்பதற்குக் காரணம் உரிய அடுத்த திருப்பம் ஆங்கே நிகழாமையே! விழுந்து கிடந்த காவியப் போக்கிற்குப் பெரும் சுவை கூட்ட வரும் இரண்டாவது பெரிய திருப்பு முனை இராவணன் தங்கை சூர்ப்பணகை வழியே அமைகிறது. இங்கேயும் கவிச்சக்ரவர்த்தி கொடி கட்டிப்பறக்கிறான்! மிகப் பெரிய திருப்பு முனையாக இராவணவதம் என்ற காவிய நோக்கிற்குச் சூர்ப்பணகை வரவும், அவள் விளைத்த திருப்பமுமே காரணங்களாகின்றன. (தொடரும்)

இன்றைய வாழ்விற்குக் — — கம்பராமாயணம்

டாக்டர் திரு. ச. முத்துக்குமரன்
துணைவேந்தர், பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி.

(மலர் 49, இதழ் 5, பக்கம் 237 இன் தொடர்ச்சி)

உன் பாதையை அறிந்துகொள்!

ஒவ்வொருவருக்கும் 'இனி என்ன செய்வது' என்று திகைத்து நிற்கும் சில சந்தர்ப்பங்கள் வாழ்வில் வருவது உண்டு. நடந்து போகும் பாதையில் சில குறுக்கீடுகள் நேர்கின்றன. அந்நேரத்தில் அவனுக்குப் போகவேண்டிய சரியான பாதை எது என்று தெரிவதில்லை. கண்ணைக் கட்டிக் காட்டில் விடப்பட்டது போன்ற மனநிலையில் நிற்கிறான். அத்தகைய ஒரு சூழலில் நண்பனிடமிருந்தோ, வழிகாட்டி ஒருவரிடமிருந்தோ, தத்துவ அறிஞர் ஒருவரிடமிருந்தோ அவனுக்கு அறிவுரை தேவைப்படுகிறது. இப்படிப்பட்ட சூழலில் கம்பராமாயணம் மனித வாழ்விற்குப் பேரளவு பயன்படும். இதற்கு இரு சான்றுகளைக் காணலாம்.

கும்பகர்ணன், வீடணன் ஆகிய இருவரும் இராவணனின் தம்பியர். அவர்கள் இருவருமே இராவணன் தவறான நெறிக்கண் செல்வதையும் அவனது செயல்கள் வீழ்ச்சிக்கே வழிவகுக்கும் என்றும் உணர்கின்றனர். வாழ்வில் தனக்கு மேல்நிலையில் இருக்கும் உயர் அதிகாரி (தலைவன்) செய்வது சரியில்லை என்று ஒருவர் கருத்து மாறுபாடு கொண்டால் அவருக்குத் தன் கருத்தைத் தெரிவிப்பதோடு அவரது செயல் தவறு என்று இடித்துரைப்பதும் அவரது கடமையாகும். மாறாக உயர் அதிகாரியோடு உடனிருந்து கொண்டு அவரது எண்ணங்களுக்கு எதிராகச் செயல்படுவது சரியன்று, ஒருவேளை அவருக்குத் தனது கருத்தைப் புரியவைக்க முடியவில்லையெனில் தன் கருத்தை மாற்றிக் கொண்டு முழு மனதுடன் தன் உயர் அதிகாரியின் நோக்கம் நிறைவேறப் பாடுபடவேண்டும். அல்லது அவரை விட்டு விலகிவிட வேண்டும். கும்பகர்ணன் தன் அண்ணனுடனேயே தங்கி அவனுக்காகப்

போராடுவதையே கடன் எனத் தேர்கிறான். வீடணனோ அண்ணனை நீங்கி எதிர்க் கட்சியுடன் சேர்ந்து கொள்கிறான்.

கும்பகர்ணன் வதைப் படலத்தில் நாம் காணும் காட்சி இது. வீடணன் இராமனின் அனுமதியுடன் கும்பகர்ணனைத் தங்களோடு சேர்த்துக்கொள்ள முயல்கிறான். ஆனால் கும்பகர்ணன் இதற்குச் சற்றும் இடம் தரவில்லை. வீடணன், கும்பகர்ணன் ஆகிய இருவர் வாயிலாக இப்பிரச்சனைகளையும் விளைவுகளையும் கம்பர் விரிவாக விவாதிக்கிறார். கும்பகர்ணன், இராவணன் நெறியல்லா நெறியிற் செல்வதால் தோற்கடிக்கப்படுவான் என்பதை நன்கு அறிந்திருக்கிறான்.

"ஆனதோ வெஞ் சமம்? அலகில் கற்புடைச்
சானகி துயர் இனம் தவிர்ந்தது இல்லையோ?
வானமும் வையமும் வளர்ந்த வான் புகழ்
போனதோ? புகுந்ததோ, பொன்றும் காலமே?"

— யுத்த காண்டம், கும்பகர்ணன் வதைப் படலம், பாடல்-79.

கும்பகர்ணன், "இராமனுக்கும், இராவணனுக்கும் போர் தொடங்கி விட்டதா? அறத்தின் முழு வடிவமாகிய சீதை படும் துன்பங்களுக்கு இன்னும் முடிவு ஏற்படவில்லையா? இராவணா! உனது பெரும் புகழின் வீழ்ச்சி தொடங்கிவிட்டதா? அரக்கர் குலத்தின் அழிவு நேரம் வந்து விட்டதா?" என்று வினவுகிறான். கும்பகர்ணனின் இவ்வார்த்தைகள் இராவணன் முற்றிலும் தவறான பாதையில் செல்கிறான்; இராமன் வெல்வதற்கரிய இராவணனை வெல்வான் என்று கும்பகர்ணன் முன்னரே உய்த்துணர்ந்திருப்பதைக் காட்டுகின்றன. எனினும் அவன் இராவணனுக்குச் செஞ்சோற்றுக் கடன் கழித்தலையே விரும்புகிறான். அதையே தன் இறுதி முடிவாக ஏற்கிறான்.

"நீர்க் கோல வாழ்வை நச்சி, நெடிது நாள் வளர்த்துப் [பின்னைப்
போர்க் கோலம் செய்து விட்டாற்கு உயிர் கொடாது, [அங்குப் போகேன்;
தார்க் கோல மேனி மைந்த; என் துயர் தவிர்த்தி ஆகின்.
கார்க் கோல மேனியானைக் கூடுதி, கடிதின் ஏகி"

— யுத்த காண்டம், கும்பகர்ணன் வதைப் படலம், பாடல்-155.

இந்த வாழ்வு நீரின் மேல் எழுதப்பட்ட கோலம் போன்றது. நிலையில்லா இந்த உலக வாழ்வையே பெரிதெனக் கருதி என்னை வளர்த்து ஆளாக்கிய இராவணனுக்குச் செஞ்சோற்றுக் கடன் கழியாமல் அங்குப் (இராமனிடம்) போகேன் என்று உறுதியாகப் பேசுகிறான்.

"ஆகுவது ஆகும், காலத்து; அழிவதும், அழிந்து சிந்திப்
போகுவது: அயலே நின்று போற்றினும், போதல் திண்ணம்,
சேகு அறத் தெளிந்தோர் நின்னில் யார் உளர்? வருத்தம்
[செய்யாது,
ஏகுதி; எம்மை நோக்கி இரங்கலை; என்றும் உள்ளாய்!"

— யுத்த காண்டம், கும்பகர்ணன் வதைப் படலம், பாடல்-166.

"நிலையான புகழையுடைய வீரனே! எது நடக்க வேண்டுமோ அது நடந்தே தீரும்; அருகில் இருந்து பாராட்டினாலும் கவனமாகப் போற்றிப் பாதுகாத்து வந்தாலும் எது அழிய வேண்டுமோ அது அழிந்து போவது உறுதி. எல்லாவற்றையும் தெளிவாகத் தெரிந்தவர்கள் உன்னைப் போல் எவரும் இலர். துன்பம் கொள்ளாமல் தயவு செய்து திரும்பிப் போ. என் நிலை குறித்து வருந்தாதே" என்று கும்பகர்ணன் இறுதியாகக் கூறுகிறான். பகைவனாகிய இராமனுடன் சேராமல் இராவணனுக்காகவே வாழ்ந்து கடமையைச் செய்வது என்னும் தன் முடிவினால் வரப் போகும் விளைவுகளையும் அவன் நன்கு அறிந்திருக்கிறான் என்பதையே இவ்வரிகள் காட்டுகின்றன. தன் சகோதரனும் மன்னனுமாகிய இராவணனுக்குத் தான் செய்ய வேண்டிய கடமையை நிறைவேற்றுவதையே அவன் விரும்புகிறான். அதே நேரம் தன் இளவல் வீடணனின் முடிவிலும் கும்பகர்ணன் எந்தக் குற்றமும் காண முயலவில்லை.

வாலி இராமனது பாணம் தாக்கிய பின்னர் இறக்கிறான். இறக்கும் நேரத்தில் இராமனிடம் வாலி ஒரு வரம் கேட்கிறான்.

"ஓவிய உருவ; நாயேன் உளது ஒன்று பெறுவது உன்பால்;
பூவியல் நறவம் மாந்தி, புந்தி வேறு உற்றபோழ்தில்,
தீவினை இயற்றுமேலும், எம்பிமேல் சீறி, என்மேல்
ஏவிய பகழி என்னும் கற்றினை ஏவல்" என்றான்.

— கிட்கிந்தா காண்டம், வாலி வதைப் படலம், பாடல்-134

"என் தம்பி சுக்ரீவன் தன் நிலை மறக்கச் செய்யும் கள்ளை மாந்தித் தவறாக நடந்து கொள்ளக் கூடும். அவன் தற்செயலாகக் கள்ளருந்தி அதன் விளைவாக ஒரு வேளை உம்மோடு மாறுபாடு கொண்டானெனில் தயவுசெய்து அவன் மீது உன் பாணத்தைச் செலுத்த வேண்டாம்' என்று இராமனிடம் பணிந்து கேட்டுக் கொள்கிறான். இராமன் தன் மீது பாணத்தைச் செலுத்தியதற்குக் காரணம் சுக்ரீவனே என்பதும், தன் இறப்பிற்கு அவனே காரணம் என்பதும் வாலிக்கு நன்கு தெரியும். அப்படி இருப்பினும் அவன் இறக்கும்போது இராமனிடம் கேட்கும் ஒரே வரம் தன் தம்பி தனக்குத் தீங்கு இழைத்திருப்பினும் அவன் தண்டிக்கப்படக் கூடாது என்பதே. இப்படிப்பட்ட உயரிய பண்பினைக்கொண்டவன் வாலி. வாலியின் வாயிலாகக் கம்பர் உலகுக்கு உணர்த்தும் உண்மை இதுவே. 'ஒருவனது வீழ்ச்சிக்கு அல்லது இறப்புக்கு மற்றொருவன் காரணமாய் இருந்தாலும், அதன் காரணமாக அவனைத் துன்புறுத்தக் கூடாது'.

முடிவு :

இதுவரை நாம் கண்டவை அனைத்தும் இன்றைய சமுதாய வாழ்க்கைக்கு இராமாயணம் எவ்வகையில் பொருத்தப்பாடு உடையது என்பது பற்றிய மேலோட்டமான விளக்கங்களே. கம்பராமாயணத்தில் காணப்படும் சில சம்பவங்களை, சூழல்களை, பாடல்களை மட்டும் தேர்ந்தெடுத்துக் கம்பராமாயணம் நிகழ்கால வாழ்வுக்கு மட்டுமல்ல எதிர்காலச் சமுதாயத்திற்கும் உரியதே என்பதை விளக்க முயன்றேன். இது ஒரு சிறிய முயற்சியே. கம்பராமாயணத்தை ஆழ்ந்து கற்போர்க்கு இது போன்ற எண்ணிறந்த கருத்துக்கள் கம்பராமாயணத்தில் காணப்படுவது தெள்ளிதிற் புலனாகும். தெய்வப்புலவர் திருவள்ளுவர் 'கற்றனைத் தூறும் அறிவு' என்று குறிப்பிடுவது போல கம்பராமாயணத்தை ஒவ்வொரு முறை கற்கும்போதும் தற்காலத்தோடு தொடர்புள்ள அஃகிய நோக்கையும் ஆழ்ந்த பொருளையும் நாம் காணலாம். ஒரு பழைய நூல் எவ்வளவுக்கெவ்வளவு மாறிவரும் காலத்தோடு இயைபு உடையதாக இருக்கிறதோ அந்த அளவுக்கு அது பயன் உடையது என்று போற்றப்படும். கம்பராமாயணம் ஒரு இறவாப் புகழ் பெற்ற காப்பியம்; அது நவீன வாழ்வுக்கேற்ற சில விழுமங் களைப் பெற்றிருப்பது வெளிப்படை. அதுவே இதன் ஒப்பற்ற பெருமையும் ஆகும்.

நம்மைப் பேணும் அம்மை

வித்துவான் திரு. சி. குமரேச பிள்ளை
சுசீந்திரம்.

(மலர் 49, இதழ் 5, பக்கம் 229 இன் தொடர்ச்சி)

ஒரு நாள் மூப்புற்று தளர்ந்த அடியார் ஒருவர் உண்ணும் வேட்கையினால் அம்மையார் அகம் புகுந்தார். அவரது பசித்த நிலைகண்ட அம்மையார், 'நாதன் அடியாரைப் பசிதீர்ப்பேன்' என எண்ணி, அவர் பாதம் விளக்க நீர் கொடுத்து, ஆசனத்து அமர்த்திப் பரிகலம் வைத்து இன்னடிசில் படைத்தார். கறி வகைகள் ஆகாமையால், தம் கணவர் 'வைக்க' எனத் தம்மிடம் கொடுத்திருந்த மாங்கனிகள் இரண்டில் ஒன்றினைப் படைத்தார். அடியாரும் அமுது செய்து அகன்று போனார். அவர் சென்ற பின் பரமதத்தன் வந்தான். வழக்கப்படி உண்ண அமர்ந்தான். அம்மையார் கணவனுக்கு அமுது படைத்தார். எஞ்சியிருந்த மாங்கனி ஒன்றையும் பரிமாறினார். மதுரமிக்க அக்கனியை உண்ட அவன் சுவை ஆராமையால் ,இனியதொரு பழம் இன்னும் உளதினை இடுக' என்றான். அம்மையாரும் எடுக்கச் செல்வார் போல் உள்ளே சென்றார்.

என்ன செய்வார்? மற்றைக்கனியோ அடியார்க்கு அமுதாகி விட்டது. இதனை ஏன் தெரிவித்திருக்கக் கூடாது? எடுக்கச் செல்வார் போல் செல்வானேன்?

சுவை ஆராமையால் வினவுகின்ற கணவனுக்குக் கொடுக்க வேண்டுமென்கிற ஆவல்தான் முதற்காரணம் கணவனது விருப்பத்திற்கு மாறாக நடக்க கற்புடைய மனைவியினது உள்ளம் இசையாது. மேலும் அக்கனி மணவாளன் 'வைக்க' என்று சொல்லித் தந்தது. அவன் சொல்லுக்கு மீறி அடியார்க்குக் கொடுத்த தன் தவறையும் உணர்ந்தாள். அதனைக் கணவனிடம் கூறி அவன் ஆவலைச் சிதைக்க அம்மையாருக்கு விருப்பமில்லை. அன்றியும் 'மடம்' என்பது மாதர்களின் அரிய பண்புகளுள் ஒன்று. கணவன் கருத்திற்கும், சொல்லுக்கும், செயலுக்கும் அடங்கிப்போதலே அப்பண்பின் இயல்பு. அப்பண்பிற் பழகி வந்தவர் அம்மையார்.

எனவே, எவ்விதமேனும் கணவனுக்குக் கனி கொடுக்க வேண்டுமே யெனத் துடித்தார். அத்துடிப்பிலே,

" அம்மருங்கு நின்றயர்வார் " அருங்கனிக்கங் கென்செய்வார்!
மெய்ம் மறந்து நினைந்துற்ற விடத்துதவும் விடையவர்தான்
தம்மனங்கொண் டுணர்தலுமே அவர் அருளால்தாழ்குழலாள்
கைம்மருங்கு வந்திருந்தது, அதி மதுரக்கனியொன்று ".

தம் குறைவைத் தமக்கு உரிமையான உற்றாரிடம் கூறி நிறைவு தேடுதல் உலகோர் இயல்பு. அம்மையார் உடலுரிமையால் உறவு கொண்டிருந்தது கணவனிடம். ஆன்ம ஒருமையால் உறவு கொண்டிருந்தது சிவபெருமானிடமே. இங்கோ, கணவருக்குக் கொடுக்க மாங்கனி வேண்டும். கனி தம்மிடம் இல்லை. யாரிடம் வினவுவார்; அடுத்த உற்றார் சிவபெருமானே; எனவே சிவபெருமானை வேண்டினர் அம்மையார். தன்னை மறந்து எம்பெருமானையே நினைத்து வேண்டுபவர்க்கு உதவும் இயல்பினர் சிவபெருமான். அம்மையார் தம் மனங்கொண்டு வேண்டிய அளவிலே அம்மையார் கையிலே கனியொன்றை அளித்தார் சிவபெருமான், அம்மையார் கணவர்க்கு அதனைப் படைத்தார். உண்ட கணவன், இது முன் தந்த கனியன்று; அதனினும் சுவையுடைத்து; இத்தகைய கனி மூவுலகும் பெறற்கரிது; பெற்றது எங்கே? என்றான்.

ஆண்டவன் அதிமதுரக்கனி அளித்த அற்புதம் தான் என்னே? முன்னைப்போலவே கொடுத்திருக்கலாகாதா? தொண்டர் தம் பெருமையை உலகம் அறிந்து போற்ற அவன் செய்யும் திருவிளையாடல்களுள் இதுவும் ஒன்று. வங்கியில் இட்ட பணம் வட்டியுடன் சேர்ந்து வருதல் வழக்கு.

" அற்றார் அழிபசி தீர்த்தல்; அஃதொருவன்
பெற்றான் பொருள் வைப்புழி ".

பொருள் பெற்ற ஒருவன் அதனைச் சேர்த்து வைக்குமிடம் பொருளற்ற வறியவனை அல்லது உலகப்பற்றை நீக்கிய அடியாரை வருத்துகின்ற பசியை நீக்குதலாகும் என்பது வள்ளுவர் கருத்து. அம்மையார் அடியார் பசியைத் தீர்த்த பழம், வட்டியாக அதிமதுரமும் சேர்ந்து திரும்பி வந்தது.

இக்கனி பெற்றதெங்கே? என்ற கணவனுரை கேட்ட அம்மையார், 'அருளுடையார் அளித்தருளும் செவ்வியபேரருள் விளம்பும் தரமன்று' என எண்ணி உண்மை கூற அஞ்சினர். 'கற்புடைப் பெண்டிர் கணவனுரை காத்தல் வேண்டும்' எனவே பொய்யும் புகல அஞ்சினர். இதில் விஞ்சியது எது?

" தெய்வம் தொழாஅள் கொழுநன்தொழு தெழுவாள் "
– என்பது வள்ளுவர் வாக்கு.

இல்லறப் பெண் தெய்வத்தினும் கணவனுக்குச் சிறப்பு கொடுக்க வேண்டும். ஆகவே, செய்தபடி சொல்லுவதே கடன் எனும் சீலத்தாராகிய அம்மையார் உண்மையைக் கணவனிடம் கூறினர்.

அதனை நம்பாத கணவன், 'ஈசனருளேல் இன்னும் ஒரு கனி அழைத்தளிப்பாய்' - என்றான்.

இப்போது அம்மையார் நிலை முன்னைவிட இன்னல் பயப்பதாகி விட்டது. சிவபெருமானையே மீண்டும் வேண்டினர்; மீண்டும் கனியொன்று வந்தது; கணவனுக்கு அளித்தார். அவன் கையில் வாங்கினன்; கையிலிருந்து அக்கனி மறைந்தது; காணாது தடுமாற்றமடைந்தான். இந்த அற்புதத்தால் அம்மையாரைத் தெய்வமெனக் கருதினன் பரமதத்தன். அவன் அன்று தொட்டு அவளுடன் உடல் தொடர்பு கொள்ளாது வாழத்தலைப்பட்டான். மேலும் ஒருநாள் அவன் பொருள் தேடுதல் என்னும் காரணத்தைக் கூறி கடற்பயணமானன். பின் அவன் பாண்டி நாட்டுப் பட்டினம் ஒன்றில் வந்து சேர்ந்தான். அங்கு ஒரு கன்னியை மணந்து வாழ்ந்து வரலானன். அவர்க்குப் பெண் குழந்தை ஒன்று பிறந்தது. அக்குழந்தைக்குப் புனிதவதியார் என்றதம்முன் மனைவியின் நாமமும் சூட்டி வளர்த்து வந்தான்.

கடல் மேல் சென்ற கணவன் வருகையின் வழி மேல் விழி வைத்துக் காத்திருந்தார் காரைக்காலம்மையார். வணிகர் சிலர் வாயிலாக கணவன் இருக்குமிடம் அறிந்தார் அம்மையார். அவர் கணவனுக்குத் தொண்டு செய்வதே கடன் என உற்ருருடன் அப்பதியடைந்தார். அம்மையாரின் வருகையறிந்த பரமதத்தன் மனைவி மக்களுடன் வரவேற்றன், தன் மகளையும், மனைவியையும் அம்மையாரை வணங்கும்படிச் செய்து தானும் வணங்கினன். அனைவரும் வியந்தனர். அம்மையாரோ அஞ்சி ஒதுங்கினர். உற்ருர் பரமதத்தனிடம், 'நீ உன் மனைவியை வணங்கியதேன்?' என்றனர். பரமதத்தன் நிகழ்ந்தவற்றைக் கூறி 'மானுடம் இவர் தாம் அல்லர், நற்பெரும் தெய்வம்'. ஆகவே இம்மகவிற்கும் இவ்வம்மையார் பெயரிட்டேன், நானும் பணிந்தேன், நீங்களும் பணியுங்கள் என்ருன்.

உடல் நாயகராகிய பரமதத்தன் தன்னைக் கைவிடவே, உயிர் நாயகராகிய சிவபெருமானைக் கைக்கொண்டார் அம்மையார்.

சிந்தை ஒன்றிய நோக்கில் மிக்க உணர்வு கொண்டு, சிவபெருமானே! நான் இவனுக்காகத் தாங்கிய இத்தசைப் பொதி வனப்பு அழித்து, உன்னைப் போற்றும் பேய் வடிவு வேண்டுமென வேண்டினார். சிவனருளால் அம்மையாருக்கு வானமும் வையமும் வணங்கும் பேய்வடிவு வாய்த்தது. இதனை அம்மையார்,

'மற்றொருவன் நெற்றியின் மேல் வைத்தான்தன் பேயாய நற்கணத்தில் ஒன்றாய நாம்' என்று அற்புதத்திருவந்தாதியில் பாடுகின்றார்.

வடிவைக் கண்டு வானம் மலர் மழை பொழிந்தது; துந்துபி நாதம் உலகெலாம் நிறைந்தது. அம்மையார் மனம் நிறைந்த காதலினால் பெருமானை அற்புதத்திருவந்தாதியால் துதித்தார்.

"யானே தவமுடையேன் என்னெஞ்சே நன்னெஞ்சம்
யானே பிறப்பறுப்பான் எண்ணினேன் - யானே அக்
கைம்மா உரிப்போர்த்த கண்ணுதலான் வெண்ணீற்ற
அம்மானுக் காளா யினேன்".

எனத் தான் அவனுக்கு ஆளாயின அற்புதத்தைத் துதித்தார். மேலும் பார்க்கு மிடமெங்கும் நீக்கமற நிற்பவன் சிவபெருமானே என்பதை உணர்ந்தவராய்,

"அறிவானும் தானே: அறிவிப்பான் தானே
அறிவாய் அறிகின்றான் தானே - அறிகின்ற
மெய்ப்பொருளும் தானே; விரி சுடர் பார் ஆகாயம்
எப்பொருளும் தானே அவன்"

எனத் துதித்தார்.

அம்மையார் துதியைக் கேட்டு அற்புதம் கொண்ட அடியார் சிலர் அம்மையாரை அணுகி 'அம்மே தாங்கள் வழிபடும் பிரான் எங்குளான்' என வினவினர். அம்மையார்,

"வானத்தான் என்பாரு மென்க மற்று உம்பர் கோன்
தானத்தான் என்பாரும் தாமென்க - ஞானத்தான்
முன்னஞ்சத் தா லிருண்ட மொய்யொளிசேர் கண்டத்தான்
என்னெஞ்சத் தான் என்பன் யான்".

என விடையிறுத்தார். மேலும் அம்மையார்' மக்களே அவன் பெருமையினைக் கேட்பீரோ?

(தொடரும்)

செய்திகள்

ஆயில்யத் திருநாள் ஆலய வழிபாடு

தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் திருநட்சத்திரமாகிய ஆயில்யத்திருநாள் ஆலய வழிபாடு தேவார வைப்புத் தலமாகிய கிள்ளிகுடியில் 2—5—90 புதன்கிழமை நடைபெற்றது. சுவாமி அம்பாளுக்கு விசேட அபிடேக ஆராதனைகள் செய்விக்கப் பெற்றன. திருக்கடவூரிலும் சிறப்பு வழிபாடு நிகழ்ந்தது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிபாடாற்றினார்கள்.

குருவருளும் அருளுபதேசமும்

தருமை ஆதீனத் திருமடத்தில் ஆங்கிலமாதம் முதல் ஞாயிற்றுக்கிழமை தோறும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் வழங்கியருளும் பெரியபுராண அருளுரை 6—5—90 ஞாயிறு மாலை நடைபெற்றது. ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் திருவாரூர்ப் பிறந்தார்கள், முப்போதும் திருமேனி தீண்டுவார், முழுநீறுபூசிய முனிவர், அப்பாலும் அடிசார்ந்தார் ஆகிய வகையடியார் பெருமைகளை உரைத்தருளினார்கள்.

ஐயாற்றில் நந்தியெம்பெருமான் திருக்கல்யாணம்

தருமை ஆதீனத்துக்குச் சொந்தமான திருவையாறு பஞ்சநதீசுவரசுவாமி திருக்கோயிலிலிருந்து எழுந்தருளித் திருமழபாடியில் நந்தியெம்பெருமான் சுயம்பிரகாச அம்மையைத் திருமணம் செய்து கொண்டருளும் ஐதிக விழா 3—4—90 செவ்வாய் காலை நிகழ்ந்தது. அறம்வளர்த்த நாயகி சமேதராய் ஐயாறப்பர் எழுந்தருளி நந்திதேவருக்குத் திருமணம் செய்வித்தருளி திருநெய்த்தானம் முதலான தலங்கள் வலமாகத் திருவையாற்றுக்கு மீண்டும் எழுந்தருளினர். அன்பர்கள் பலர் தரிசித்து இன்புற்றனர்.

சித்தர்க்காட்டில் ஸ்ரீ சிற்றம்பலநாடிகள் குருபூசை விழா

திருக்கயிலாய பரம்பரையில் நந்திதேவர் திருமரபில் மெய்கண்ட சந்தானத்தில் ஆசாரியராக விளங்கிய ஸ்ரீசிற்றம்பலநாடிகள் குருபூசை விழா தருமை ஆதீனச் சார்பில் 19—4—90 வியாழக்கிழமை காலை சிறப்புற நடைபெற்றது. ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் எழுந்தருளி வழிபாடாற்றி அருட்பிரசாதம் வழங்கியருளினார்கள். மயிலாடுதுறை டாக்டர் திரு. எம். சுவாமிநாதன், வழக்கறிஞர் திரு இரா. சிவபுண்ணியம் தருமபுரம்

அண்ணாமலைப் பல்கலைக்கழக சைவசித்தாந்த ஆராய்ச்சி நிறுவனப் பேராசிரியர் டாக்டர் திரு. கு. சுந்தரமூர்த்தி, ஆய்வு உதவியாளர் திரு. பா. சிவநேசன் ஆகியோர் சொற்பொழிவு நிகழ்த்தினர்.

திருவாமூரில் அப்பர் சுவாமிகள் குருபூசை விழா

திருநாவுக்கரசு சுவாமிகள் குருபூஜைவிழா அவர் அவதரித்த திருவாமூரில் 19—4—90 முதல் 21—4—90 முடிய மூன்று நாட்கள் சிறப்புற நடைபெற்றது. 19—4—90 காலை கணபதி ஹோமம் ஸ்ரீ பசுபதீசுவரர் வழிபாடு ஆகியவற்றுடன் விழா தொடங்கியது. திருமுறை இசைவாணர்கள், சிவபூசகர்கள், அன்பர்கள் பலர் மூன்று நாட்களிலும் அப்பர் பெருமானுக்கு நடைபெற்ற அபிடேக ஆராதனைகளில் பங்கு கொண்டனர்.

கருத்தரங்கம், பண் ஆராய்ச்சி, வழக்காடுமன்றம், பட்டி மன்றம், பொம்மலாட்டம், இன்னிசை விரிவுரைகளுடன் திருமுறை மாநாடு நடைபெற்றது.

தொண்டைமண்டல ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம், திருப்பனந்தாள் காசிமடம் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் தமிழ் நாடு அரசு அறநிலைய அமைச்சர் மாண்புமிகு கே. பி. கந்தசாமி அறநிலையத்துறை உதவி ஆணையர், துணை ஆணையர் முதலியோர் கலந்துகொண்டனர்.

21—4—90 குருபூசைத் திருநாள் அன்று தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி அபிஷேக ஆராதனைகள்செய்வித்து வழிபாடாற்றி அருளாசி வழங்கினார்கள். வேதாரண்யம் திரு. க. தியாகராஜ தேசிகருக்கு திருமுறைக் கலாநிதி பட்டமும் ரூபாய் ஆயிரத்தொன்று அடங்கிய பண முடிப்பும் பொன்னாடையும் அளித்தருளினார்கள். இரவு அப்பர் திருவீதிஉலா நிகழ்ந்தது.

குருபூஜை விழாக் குழுவினர்களாகிய திரு. கு. ராமமூர்த்தி ரெட்டியார் சிதம்பரம் திரு. திருநாவுக்கரசுபிள்ளை திரு முத்துராம ரெட்டியார் ஏரிப்பாளையம் திரு. திருநாவுக்கரசுபிள்ளை எலந்தம் பட்டு அருணாசலம்பிள்ளை ஆகியோர்சிறப்புறவிழாவை நடத்தினர்.

தருமபுரத்திலும் சிதம்பரத்திலும் அப்பரடிகள் குருபூஜை விழா

தருமபுர ஆதீனம் ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயிலிலும், சிதம்பரம் ஸ்ரீ சபாநாயகர் திருக்கோயிலிலும் அப்பர் சுவாமிகள் குருபூஜை விழா 27—4—90 சனிக்கிழமை நிகழ்ந்தது. சமயாசாரிய சுவாமிகளுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் நடத்தப் பெற்றன.

தருமபுரத்தில் புலவர் திரு. கே. கணபதி அவர்களும், சிதம்பரத்தில் திருமுறைக்கலாநிதி திரு. எம் கனகசபைப்பிள்ளை திருமுறை ஓத கவித்தென்றல் பிரமஸ்ரீ உ. ந. உமாநாத தீக்ஷிதர் தலைமையில் வித்துவான் திருமதி. ப. நீலா அவர்கள் அப்பர் அருந்தமிழ் பற்றி உரையாற்றினர்.

திருபுவனத்தில் ஸ்ரீ சரபருக்கு ஏகதின லக்ஷார்ச்சனை

தருமபுர ஆதீனத்துக்குச் சொந்தமான திருபுவனம் ஸ்ரீ கம்பகரேச்வரசுவாமி திருக்கோயிலில் ஸ்ரீ சரபமூர்த்திக்கு 15–4–90 ஞாயிற்றுக்கிழமை ஏகதின லக்ஷார்ச்சனை நடைபெற்றது. ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் எழுந்தருளி வழிபாடாற்றினர்கள். அன்பர்கள் பலர் வந்திருந்து வழிபட்டு மகிழ்ந்தனர்,

திருக்கடவூர்த் திருக்கோயிற் பெருவிழா

தருமை ஆதீனத்திற்குச்சொந்தமான திருக்கடவூர்ஸ்ரீ அமிர்தகடேசுவரசுவாமி திருக்கோயிலில் 27–4–90 முதல் தொடங்கி பெருவிழா நடைபெற்றுவருகிறது. 4–5–90 வெள்ளிக்கிழமை காலசம்காரவிழா, ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் எழுந்தருளி வழிபட்டார்கள். அன்பர்கள் பல்லாயிரவர் திருவிழாவைக்கண்டு களித்து இன்புற்றனர். விழாநாட்களில் பேராசிரியர் திரு. சாமி. கிருஷ்ணமூர்த்தி, திருமதி. ப. நீலா, திரு. கா. ம கண்ணப்பன், டாக்டர் திரு. இரா. செல்வக்கணபதி, திரு தியாகப்பசெட்டியார் முதலியோர் சமயச் சொற்பொழிவுகள் ஆற்றினர்.

சீகாழித் திருக்கோயிற் பெருவிழாவும், திருமுலைப்பால் விழாவும்

தருமை ஆதீனத்துக்குச்சொந்தமா சீகாழி ஸ்ரீசட்டைநாத சுவாமி திருக்கோயிற் பெருவிழா 27–4–90 ஞாயிறு தொடங்கி நடைபெற்றுவருகிறது. 30–4–90 திங்கட்கிழமை திருமுலைப்பால் திருவிழா. திருஞானசம்பந்தருக்கு உமையம்மை ஞானப்பால் அளித்த அற்புத ஐதிக நிகழ்ச்சி நடைபெற்றது. ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிபாடாற்றித் திருஞான சம்பந்தப் பெருமானை எழுந்தருளுவித்துப் பிரமதீர்த்தக் கரைக்கு அழைத்து வந்தருளினார்கள். இவ்விழாவில் திருமுறை இசை வாணர் ஒருவருக்கு திருமுறைக்கலாநிதி பட்டம் வழங்கிச் சிறப்பிக்கும்வரிசையில் இவ்வாண்டு ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் திருக்களர் திரு தி. இரகுநாத தேசிகருக்குத் திருமுறைக்கலாநிதி பட்டமும், ரூ. 1001 பணமுடிப்பும், பொன்னாடையும் அளித்து ஆசிர்வதித்தார்கள். அறிஞர்கள்பலர் அற்புதவிளக்க விரிவுரைகள் ஆற்றினர்.

எதிர்காலம்

ஜோதிஷம் திரு. A. இராசமாணிக்கம்

ஓய்வுபெற்ற ஆசிரியர்

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நடுநிலைப்பள்ளி, திருப்பனந்தாள்.

(பிரமோதூத ஸ்ரீ வைகாசி மீ 1உ முதல் 31உ முடிய)

(15—5—1990 முதல் 14—6—1990 முடிய)

பிரமோதூத ஸ்ரீ சித்திரைமீ 31உ சோமவாரம் பூராட நக்ஷத்திரம் தைத்துலை கரணம் கூடிய காலத்தில் சூரிய உதயம் முதல் 43 நாழிகை 14 விநாடிக்கு மகரலக்னத்தில் ஸ்ரீ உலகரட்சகரான சூரியபகவான் மேஷராசியினின்றும் ரிஷபராசி சங்கிரமணமாக வைகாசிமாதப்பிரவேசம் செய்தருளுகின்றார். அன்று விஷ்ணுபதி புண்ணியகாலம். மறுதினம் மங்களவாரம் வைகாசிமாதம் முதல் தேதியாகும். இம்மாதம் சங்கிரமண கால கிரகஸ்திதி கிரகமாலிகையாய் இருப்பதால் சர்வேஸ்வரன் அருளில் உலகில் சர்வஜனங்களுக்கும் இரட்சகம் ஏற்படும். ஜனங்கள் ஆக்கத்தொழிலில் முன்னேற்ற ஸ்திதியில் விளங்குவர். தேசங்களில் பொருளாதாரம் மேலோங்கும். எல்லாசமூகத்தினரும் உயர்பண்பில் திகழ்வார்கள். உலகெங்கும் உள்ள திருமடங்கள் ஆசாரிய பீடங்களில் பரம ஞானாசாரியர்களாக வந்துள்ள சிவஞான குருமகாலிங்கள் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானங்கள், ஜகத்குருமார்கள் லோகத்துக்கு சிவபரம் பொருளின் மகத்துவம் சிவாசாரசெந்நெறி அதனினும் மாந்தர்கள் திஷ்களங்கமனதில் மனம் வைத்து செயல்புரிந்து செவ்விய வழியில் உயர்தல் ஆகியவை தம் திருவாய் மலர்ந்து விமர்சித்து அருள்வார்கள். பக்தர்கள் அனைவருக்கும் மகாபிரசாதம் வழங்கி ஆசியருள்வார்கள். தேசங்களில் எங்கும் தேவாலயங்களில் நித்தியம் ஆறுகாலப்பூசைகள் சிறப்பு ஆராதனைகள் வசந்தோற்சவ வைபவங்கள் க்ஷேத்திரங்களின் ஐதீகப்படி நடைபெற்றுவரும். எல்லாபிரஜைகளும் தெய்வபக்தியில் திகழ்வார்கள். சைவசமயம் உலகெங்கும் பரவும். மக்கள் சிவாசாரநெறிவழியில் திகழ்வார்கள்.

பஞ்சாங்க கணித சாஸ்திரம்

குறிப்பு :- பஞ்சாங்ககணிதம் கணிப்பதற்குமுன் ஆயத்தசாதனமாக அந்தந்த பிரதேச அட்சாம்ஸ பாகைகளுக்கு விஷுவச்சாயை

(பலச்சாயை) கணிதம் செய்து கொள்ள வேணும். அடுத்து பிரதேச சரகண்டம் கணித்துக்கொள்ளவேணும். அதனின்றும் சுதேசத்திற்கு இராசிமான சாங்கை கணிதம் செய்துகொள்ளுதல் வேணும். இரவி சரபலம் அறிந்து அன்றுட அகஸ் அதாவது பகல் நாழிகை கணித்துக்கொள்ளவேணும். இக்கணிதங்களுக்கு சாதனமாக மகஜா வாக்கியம் உள்ளது. அது கீழ்க்குறிப்பிட்டுள்ள பதகம் ஆகும்.

மகஜாவும் அதன் அந்திரமும்.

பதகம் 1.

ஜ்யா	ஜ்யாகண்டம்	அந்தரம்	ஜ்யா	ஜ்யாகண்டம்	அந்தரம்
1	225	224	13	2585	143
2	449	222	14	2728	131
3	671	219	15	2859	119
4	890	215	16	2978	106
5	1105	210	17	3084	93
6	1315	205	18	3177	79
7	1520	199	19	3256	65
8	1719	191	20	3321	51
9	1910	183	21	3372	37
10	2093	174	22	3409	22
11	2667	163	23	3431	7
12	2431	154	24	3438	0

இதன் மூலம் மேற்குறிப்பிட்டவை கணிக்கும் வழி அடுத்து விவரம் வரும்.

1. மேஷம் :- அசுவதி - பரணி - கார்த்திகை $\frac{1}{4}$

மேஷராசி 9 பாதங்களும் சுபபலன் தரும். பணவருமானம் கணிசமாக வந்துநிறையும். இலட்சியப்போக்கில் நற்செலவினமும் ஏற்கும், புண்ணியதீர்த்தயாத்திராபலன் சித்திக்கும். நல்லோர் பிரபலஸ்தர் சந்திப்பு அளவளாவல் ஆகும். மே 26உ முதல் புத்திசாதுரியத்தில் அரிய பெரிய காரியங்களை நிறைவு செய்து வருதல் ஆகும். ஜூன் முதலில் அரசுலிகிதம் வரச்செய்யும் நல்லஏற்பாடுகள் நடக்கும். தாரம்புத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்துவரும். ஜூன் 7, 8 தேதிகள் சந்திராஷ்டமம். செவ்வாய், புதன் சுபம்.

2. ரிஷபம் :- கார்த்திகை $\frac{3}{4}$ - உரோகிணி - மிருகசீரிஷம் $\frac{1}{2}$

ரிஷபராசி 7 பாதங்களும் சுப பலன்தரும். பண வருமானம் வந்துகொண்டிருக்கும். வித்துவத்துவம் கலைத்துறையில் பிரசித்த

தரும். புத்திரர் நலம் சுப விஷயங்களில் நல்ல செலவினங்களைச் செய்யும். ஜுன் முதலில் அரசாங்கத்திலிருந்து நன்மை ஏற்பட்டு வரும். தாம்பத்ய வாழ்வில் நல்ல சௌகர்யம் தரும். வைதீக ஆசார அனுஷ்டானம் பேணும் குலம்விளங்க தெய்வபூசை செய்து வரவும். ஜுன் 9, 10 தேதிகள் சந்திராஷ்டமம், வியாழன், வெள்ளி சுபம்.

3. மிதுனம் :- மிருகசீரிஷம் ½ - திருவாதிரை - புனர்பூசம் ¾

மிதுனராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். பணவருமானம் நல்லவகையில் வந்துகொண்டிருக்கும். வித்துவத்துவம் கலைத்துறையில் செய்தொழில் உத்தியோகத்தில் அரசசகாயம், விளம்பரம் ஆகியவற்றில் செலவினமும் ஏற்படும். மே 22 தேதியில் ஓர் நற்சம்பவமும் விசேஷ நன்மையும் ஏற்படும். எல்லாகாரியங்களும் வெற்றிகரமாக செயல்பட்டுக் கொண்டிருக்கும், தாரம் புத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்துவரும். மே 15, 16, 17, ஜுன் 12, 13 தேதிகள் சந்திராஷ்டமம். சனி, ஞாயிறு சுபம்.

4. கடகம் :- புனர்பூசம் ¼ - பூசம் - ஆயில்யம்.

கடகராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். பணவருமானம் எல்லாபிரச்சினைகளையும் சரிகட்டும் அளவிற்கு வந்து நிறையும். பூஷணங்களின் பிராப்தியளிக்கும். வாகன சௌகரியம் மேலாக இருந்துவரும். ஜுன் முதலில் அரசாங்க நற்செய்தி வந்து மகிழ்ச்சிதரும். வித்துவத்துவம் கலைத்துறையில் உயர்ஸ்திதி ஆகும். எல்லாகாரியங்களும் புத்தி மேம்பாட்டில் அரசகார்யமாக நடந்து கொண்டிருக்கும். தாரம்புத்திரர்களுக்கு சௌக்கிய பலன்தரும். மே 18, 19 ஜுன் 14இத்தேதிகள் சந்திராட்டமம். செவ்வாய், புதன் சுபம்.

5. சிம்மம் :- மகம் - பூரம் - உத்திரம் ¼

சிம்மராசி 9 பாதங்களும் சுப பலன்தரும். பணவருமானம் வெகுவாக வரும். இல்லத்தில் சுபம் ஏற்படும். வித்தியா வியாபாராதிகளில் கலைத்துறையில் நற்பலன் வந்துகொண்டிருக்கும். ஜுன் முதலில் ஒப்பந்தங்களின் கிரியைகளில் விசேஷ பலனை உண்டு பண்ணும். அரசாங்க நன்மை ஏற்படும். நல்லோர் பிரபலஸ்தர்களால் நன்மதிப்பும் பிரயோஜனங்களும் ஏற்படும். எல்லாக் காரியங்களும் அரசகெடியில் நடந்துகொண்டிருக்கும். தாம்பத்திய வாழ்க்கையில் சுபிட்சம் இருந்துவரும், மே 20, 21 தேதிகள் சந்திராஷ்டமம். வியாழன், வெள்ளி சுபம்.

6. கன்னி :- உத்திரம் ¾ - ஹஸ்தம் - சித்திரை ½

கன்னியாராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். பண வருமானம் கணிசமாக வரும், வித்துவத்வம் கலைத்துறையில் நல்ல பிரயோஜனம் வந்துகொண்டிருக்கும். மே 25 தேதிமுதல் உடல் ஆரோக்கியம்தரும். அரசாங்கம் மேலிடத்திய நற்செய்தி வரும். மகிழ்வு ஏற்படும். புத்திரருக்கு வயிற்றில் நலிவு ஏற்படினும் உடன் குணமாகும். தாம்பத்திய வாழ்வில் பிணக்கு ஒருபுறம் இருப்பினும் சுமுகத்தில் இல்லற தர்மம் நடந்துகொண்டிருக்கும். மே 22, 23 தேதிகள் சந்திராஷ்டமம். சனி, ஞாயிறு சுபம்.

7. துலாம் :- சித்திரை ½ - சுவாதி - விசாகம் ¾

துலாராசி 9 பாதங்களும் மிச்சிர பலனாக நடக்கும், பணவருமானம் கன்யஸ்திதிக்கு ஏற்ப வரவாகும். வித்யா வியாபாராதிகளில் கலைத்துறையில் ஜூன் முதல் பிரயோஜனசித்தி ஏற்படும், மன மகிழ்ச்சி ஆகும். சத்துருபங்கம் ஆகும். உடல்ஆரோக்கியம் நன்றாக இருந்துவரும். புத்திரர்களின் கல்வி கலைகளில் முன்னேற்றம் தரும். தாம்பத்திய வாழ்வில் நல்ல சௌகரியங்களை ஏற்படுத்தி வரும். மே 24, 25 தேதிகள் சந்திராஷ்டமம். திங்கள், செவ்வாய், சுபம்.

8. விருச்சிகம் :- விசாகம் ¼ - அனுஷம் - கேட்டை

விருச்சிகராசி 9 பாதங்களும் மிச்சிர பலனாக நடக்கும். பண வருமானம் வரும். சுப விசேஷம் செய்யும். வைதிகம் ஆசார அனுஷ்டானம் பேணும். பரோபகார தர்மங்கள் பொதுவுடமை பராமரிப்புகளில் பொறுப்பு வகிக்கும். வித்துவத்துவம் கலைத்துறையில் நன்மை ஏற்படச் செய்யும். முன்னதாக விலகி இருந்தவர் ஒருவர் ஒன்று கூடுவர். தாரம் புத்திரர்களின் நலம் நன்றாக இருந்து வரும். மே 26, 27 தேதிகள் சந்திராஷ்டமம். புதன், வியாழன் சுபம்.

9. தனுசு -: மூலம் - பூராடம் - உத்திராடம் ¼

தனுர்ராசி 9 பாதங்களும் சுபபலன் தரும். பணவருமானம் நல்ல வகையில் வரவாகும். வித்துவத்தும் கலைத்துறையில் சிறப்பு தரும். நல்லோர் பிரபலஸ்தர் சந்திப்பு அளவளாவில் மகிழ்ச்சியாகும். அன்புக்குரியவர் ஒருவர் சிறிது காலம் விலகி இருப்பர். எல்லா காரியங்களையும் இஷ்டசித்தியாக நிறைவு செய்யும். ஜூன் 4தேதி முதல் அரசு அனுமதி காரியங்களில் செம்மை ஏற்பட்டு புகழ் மேலிடும். தாரம் புத்திரர்களுக்கு சௌக்கிய பலன் தரும். மே28,29 தேதிகள் சந்திராஷ்டமம், வெள்ளி சனி சுபம்.

10. மகரம் :- உத்திராடம் ¾ - திருவோணம் - அவிட்டம் ½

மகரராசி 9 பாதங்களும் மிச்சரபலனாக நடக்கும். பண வருமானம் வரும். உடன் சம செலவாகும். நெருக்கடி பிரச்சனைகளில் தக்கோரால் நன்மைகளும் நல்ல தீர்வும் ஏற்படும். மன வலிமையளிக்கும். வித்துவத்துவம்கலைத்துறையில் விசேஷநன்மையை ஏற்படுத்தும். நல்ல பூஷணம் தரும். வாகன பிராப்தி வசதி உள்ள வாசஸ்தலம் ஏற்பட வாய்ப்புண்டு. உத்தியோகத்தில் உயர்வுதரும். தாரா புத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்துவரும். மே 30, 31 ஜான் 1 இத்தேதிகள் சந்திராஷ்டமம். ஞாயிறு, திங்கள் சுபம்.

11. கும்பம் :- அவிட்டம் ½ - சதயம் - பூரட்டாதி ¾

கும்பராசி 9 பாதங்களும் சுபபலன் தரும். பண வருமானம் நல்லவகையில் வரும். உறுதி வாக்களிக்கும். அவசர வார்த்தை பகர்வதில் மற்றவரின் மனஸ்தாபம் வரும். வரினும் நேர்மை வழுவாது கிரியை மேற்கொள்ளும். வித்தியா வியசபாராதிகளில் கலைத்துறையில் ஜான் முதல் விசேஷ பலனை உண்டுபண்ணும். நல்ல பூஷணம் தரும். அரசாங்கத்திலிருந்து நல்விஷயலிகிதம் வரும். ஜான் 23 தேதிகள் சந்திராஷ்டமம். வியாழன், வெள்ளி சுபம்.

12. மீனம் :- பூரட்டாதி ¼ - உத்திரட்டாதி - ரேவதி.

மீனராசி9பாதங்களும் சுபமான பலனைத்தரும். பணவருமானம் வந்து நிறையும். சிந்தையில் தெளிவு ஏற்படும். வித்துவத்துவத்தில் சிறப்பு தரும். இல்லத்தில் நல்ல நிகழ்ச்சிகள் ஏற்படும். நல்லோர் பிரபலஸ்தர் சந்திப்பு அளவளாவல் மகிழ்ச்சிதரும். நல் விஷய வெளியீடு பிரசித்தம் தரும். எல்லாகாரியங்களையும் விளாவுபடுத்தி பூர்த்தி செய்தல் ஆகும். தார சௌக்கியம் புத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்துவரும். அமைதி வாழ்க்கை நடத்தும். ஜான் 4, 5 தேதிகள் சந்திராஷ்டமம். ஞாயிறு திங்கள் சுபம்.

பார்வையாளர் குறிப்பு

தருமை ஆதீனத்திற்குச் சொந்தமான
வேளூர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானம்
வைத்தீசுவரன்கோயில்

இன்று தரிசனம் மனதுக்கு மிகவும் பக்தி அமைதி கொடுப்பதாக மிக சிறப்பாக இருந்தது. கோயில் பராமரிப்பு மிகவும் நேர்த்தியாக உள்ளது. அலுவலர்களின் பண்பு, அன்பு, வரவேற்பு மிகவும் பாராட்டத்தக்கதாக அமைந்துள்ளது.

(ஒ-ம்) மோகன்,
முதன்மை மண்டல மேலாளர்,
9—4—90, TNCSC. தஞ்சை.

வைகாசி மாதச் சிறப்பு நாட்கள்

15—5—90 செவ்வாய், ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி மகோற்சவ தீர்த்தம். தருமை ஆதீன ஸ்தாபகர் ஸ்ரீலஸ்ரீ ஆதிகுருஞானசம்பந்தர் குருபூஜை. மாகேசுவரபூஜை. மாலை 26 ஆவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் திருமஞ்சனமாடி. குருபூசைவழிபாடு.

16—5—90 புதன், தருமை ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி திருக்கோயிலில் 108 சிவபூஜகர்கள் சிவபூஜை செய்தல். ஆதீன மடாலயத்தில் மாகேசுவரபூஜை. இரவு 26 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரியசுவாமிகள் பட்டினப்பிரவேசம்.

18—5—90 வெள்ளி, வைசிரசு, சீகாழி ஸ்ரீ முத்துச்சட்டைநாதர்

22—5—90 செவ்வாய், பிரதோஷம், மாதசிவராத்திரி. [உற்சவம்.

23—5—90 புதன், போதாயன அமாவாசை.

23—5—90 கழற்சிங்க நாயனார் குருபூஜை.

24—5—90 வியாழன், சர்வ அமாவாசை, கிருத்திகை விரதம், தருமை ஸ்ரீ சண்முகர் அபிஷேகம். வேளூர் கிருத்திகை.

27—5—90 நம்பியாண்டார்நம்பி நாயனார் குருபூஜை.

28—5—90 திங்கள், ஆச்சாள்புரம் திருக்குவளை, திருவையாறு முதலிய தலங்களில் வைகாசி உற்சவ ஆரம்பம். அக்னி நக்ஷத்திர நிவர்த்தி 37-18. சேக்கிழார், நமிநந்தியடிகள் நாயனார் குருபூஜைகள்.

29—5—90 செவ்வாய், சஷ்டிவிரதம். வேளூர் வைகாசி உற்சவ ஆரம்பம் சோமாசிமாறர் நாயனார் குருபூஜை.

30—5—90 புதன், ஆயில்ய விழா.

1—6—90 வெள்ளி, வைகாசிப் பெருவிழாவில் சகோபுர ரிஷப வாகனக் காட்சி.

3—6—90 ஞாயிறு, வைகாசிப் பெருவிழாவில் திருக்கல்யாண உற்சவம். வியசிரசு.

5—6—90 செவ்வாய், பிரதோஷம், வைகாசிப்பெருவிழாவில்திருத்தேர்.

6—6—90 புதன், வைகாசிவிசாகம், ஆச்சாள்புரம், திருக்குவளை, திருவையாறு முதலிய தலங்களில் தீர்த்தம். திருக்குறுக்கை ஸ்ரீ காமதகனமூர்த்திக்கு அபிஷேகம். சீகாழி ஸ்ரீ திருஞான சம்பந்தருக்கு ரக்ஷாபந்தனம்.

8—6—90 வெள்ளி, பௌர்ணமி விரதம்.

9—6—90 சனி, ஸ்ரீ திருஞானசம்பந்தர் குருபூஜை. தருமை, சீகாழி, காரைக்கால் முதலிய தலங்களில் ஸ்ரீ திருஞானசம்பந்தர் அபிஷேகம். ஐக்கியம். ஆச்சாள்புரம் ஸ்ரீ தோத்திர பூரணாம்பிகை உடனாகிய ஸ்ரீ திருஞானசம்பந்தருக்குத் திருக்கல்யாணம். பின்னிரவு விடியல் ஐக்கியம். ஜோதி தரிசனம். முருக நாயனார், திருநீலநக்க நாயனார், திருநீலகண்ட யாழ்ப்பாணர் குருபூஜைகள்.

11—6—90 திங்கள், திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் ஸ்ரீலஸ்ரீகுமரகுருபர சுவாமிகள் குருபூஜை. மாகேசுவரபூஜை.

GNANASAMBANDAM

Regd. No. TN / M. M. 1

வெளிநாடு Regd. No. TN / M.M.

சண்முக விலாசமும்

திருத்தேர் வீதி உலாக் காட்சியும்



குறிப்பு :- உற்சவகாலங்களில் இன்னிசைக் கருவிகளுடன் ஆதீனத் தேவாரப் பாடசாலை ஆசிரியர்களாலும் மாணவர்களாலும் திருமுறைப் பாராயணமும், வேத சிவாகம பாடசாலை ஆசிரியர்கள் மாணவர்களால் வேதபாராயணமும் நிகழ்த்தப்பெறும்.

Printed & Published by V. Ramaiah Pillai, Manager, Dharmapuram, at the Gnanasambandam Press, Dharmapuram, Mayiladuthurai 10-5-